பக்கங்கள்:-பன்னிரண்டு

*Registered as a News paper in Sri Lanka*

# வலம்புரி

VALAMPURI

விலை ரூபா. 7.00

சங்கு 05 | வள்ளுவர் ஆண்டு 2035 | ஆவணி 19 | சனிக்கிழமை | (04.09.2004) | தொலைபேசி - 2223378 | ஒலி 260



ராம்கோ சீமெந்து

MADRAS CEMENTS LTD

RAMCO CEMENT

ஆசியாக் கண்டத்தில் முதலாம் தரத் தொழிற்சாலையில் இருந்து தயாரிக்கப்பட்டது.


## போர் எம்மீது திணிக்கப்படுமானால் அதனை எதிர்கொள்ள நாம் தயார்!


### அரசியல் துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன்

(கிளிநொச்சி)

இலங்கையின் பேரினவாதக் கட்சிகள் தமிழ் மக்கள் மீது மீண்டும் ஒருபோரைத் திணித்தால், அதனை எதிர்கொள்ள தமிழ்மக்களும் தமிழீழ விடுதலைப் புலிகளும் தயாராகவே இருக்கின்றனர் என தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தெரிவித்துள்ளார்.

மலையக மக்கள் முன்னணியின் தலைவரும், நாடாளுமன்ற உறுப்பினரு

(12 ஆம் பக்கம் பார்க்க)



# இடைக்கால நிர்வாகத்தில் உடன்பட்டபின்

# 3 மாதத்திற்குள் இறுதித் தீர்வு பற்றி பேச்சு

## இதுவே அரசின் நிலைப்பாடு; ஜனாதிபதி சந்திரிகா அறிவிப்பு



(நமது நிருபர்)

**இடைக்கால நிர்வாகம் குறித்து விடுதலைப் புலிகளுடன் பேசுவதற்கு அரசாங்கம் தயாராகவுள்ளது. ஆனால் இடைக்கால நிர்வாகம் பற்றிய பேச்சுக்களில் உடன்பாடு எட்டப்பட்டு, அதனை நடைமுறைப்படுத்துவற்கான மூன்று மாத காலப் பகுதியில் இறுதித் தீர்வு பற்றிய பேச்சுக்களும் ஆரம்பிக்கப்படும். இதற்கு விடுதலைப் புலிகள் உடன்படுவதாக இல்லை.**

இவ்வாறு ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தெரிவித்துள்ளார். இரண்டு வாரகால தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு லண்டன் சென்றிருந்த ஜனாதிபதி நேற்று அதிகாலை நாடு திரும்பியிருந்தார். நாடு திரும்பிய ஜனாதிபதி நேற்று வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களை சந்தித்து சமாதான முயற்சிகளின் தற்போதைய நிலை குறித்தும் அரசின் நிலைப்பாடு குறித்தும் விரிவாக விளக்கினார்.

பத்திரிகையாளர்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி மேலும் தெரிவித்திருப்பதாவது,

விடுதலைப் புலிகளுடனான சமாதானப் பேச்சுவார்த்தைகள் தடைப்பட்டுப் போயுள்ள போதும் மீண்டும் நாட்டில் யுத்தம் வெடிக்கும் வாய்ப்புக்கள் எதுவும் இல்லை. சமாதான முயற்சிகளைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்வதற்கு விடுதலைப் புலிகளும் ஏன் அரசாங்கமும் கூட தயாராகத் தான் இருக்கிறது.

(12 ஆம் பக்கம் பார்க்க)

புரிந்துணர்வு உடன்படிக்கைக்கு எதிரான வழக்கு

## தலைவர் பிரபாகரனுக்கு நீதிமன்றம் அழைப்பாணை

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனை எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 1 ஆம் திகதி மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு மேன்முறையீட்டு நீதிமன்ற நீதிபதி சலீம் மர்சூப் உத்தரவிட்டுள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவரும் முன்னாள் பிரதம மந்திரியுமான ரணில் விக்கிரமசிங்கவுக்கும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கும் இடையில் செய்துகொள்ளப்பட்ட யுத்த நிறுத்த ஒப்பந்தத்திற்கு எதிராக ஜாதிக ஹெல உறுமய, ஜே.வி.பி மற்றும் சிங்கள ஜாதிக சங்கம் ஆகிய அரசியல் கட்சிகளும் மற்றும் திலக் கருணாரத்னவும் சமர்ப்பித்த மனுக்களை ஆராய்ந்த பின்னரே

(12 ஆம் பக்கம் பார்க்க)

## அரசுக்கு ஆதரவு வழங்க இ.தொ.காங்கிரஸ் முடிவு

### செய்தியாளர் மாநாட்டில் ஆறுமுகம் தொண்டமான் அறிவிப்பு

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதான நடவடிக்கைகளை முன்னெடுத்துச் செல்வதற்கும், அபிவிருத்திப் பணிகளை தடையின்றி மேற்கொள்வதற்கும் ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்திற்கு பூரண ஆதரவு வழங்கத் தீர்மானித்துள்ளதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுக் காலை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

விடுதலைப் புலிகளால் அரசாங்கத்திடம் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாக யோசனையை அடிப்படையாகக் கொண்டு சமாதானப் பேச்சுவார்த்தையை ஆரம்பிப்பதற்கு எமது

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் கிழக்கு தளபதி ரமேஷ் உலங்கு வானூர்தியில் வன்னிக்கு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப் புலிகளின் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் ரமேஷ் தலைமையிலான குழுவினர் நேற்று இலங்கை விமானப் படையின் உலங்கு வானூர்தி மூலம் கிளிநொச்சியை சென்றடைந்துள்ளனர்.

நேற்றுக் காலை விமானப் படையின் சிறப்பு உலங்கு வானூர்தியில் கிளிநொச்சி சென்ற கேணல் ரமேஷ்"டன் மட்டக்களப்பு அம்பாறை

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பொறித்தது ஜனாதிபதியின் பெயர் அடிக்கல் நாட்டியது பிரதமர் மகிந்த

### கட்சிக்குள் பூகம்பம்

(கொழும்பு)

சிறிலங்கா சுதந்திரக் கட்சியின் தலைமையகத்திற்கான அடிக்கல் நாட்டும் வைபவம் பத்தரமுல்லவில் நேற்று முன்தினம் நடைபெற்றது. இவ் அடிக்கல் நாட்டு வைபவத்தை பிற்போடுமாறு ஜனாதிபதி கேட்டிருந்தபோதும் கட்சியின் ஏனைய தலைவர்கள் தாம் ஏற்கனவே திட்டமிட்டபடி இவ் வைபவத்தை நடத்தியிருக்கின்றனர். இதனால் கட்சிக்குள் பெரும் குழப்பம்

(12 ஆம் பக்கம் பார்க்க)

## பட்டதாரிகளுக்கு பயிற்சி ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரச துறைகளில் நியமனம் வழங்குதல் தொடர்பில் பயிலுநர் நியமனக் கடிதம் வழங்கப்பட்ட யாழ். மாவட்ட பட்டதாரிகளுக்கான பயிற்சிகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை ஆரம்பமாகவுள்ளதாக யாழ். அரச அதிபர் செ. பத்மநாதன் தெரிவித்தார்.

பட்டதாரி பயிலுநர்களுக்கான பயிற்சிகள் தொடர்ந்து

(12 ஆம் பக்கம் பார்க்க)

## சித்திரவதைக்குள்ளான ஆறு சிறுவர்கள் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டனர்

(திருநெல்வேலி)

சித்திரவதைக்கு உள்ளான நிலையில் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்ட 6 சிறுவர்கள் சர்வதேச செஞ்சிலுவைச் சங்கப் பிரதிநிதிகளிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் நேற்று முன்தினம் இவர்களை சர்வதேச செஞ்சிலுவை சங்கப் பிரதிநிதிகளிடம் ஒப்படைத்தார்.

இரண்டு மாதங்களுக்கு முன்னர் மட்டக்களப்பில் இருந்து தொழிலுக்காக அழைத்து வரப்பட்டு திருகோணமலை கல்லறாவு என்னும் இடத்தில் பெரும்பான்மையினத்தவரின் மீன் வாடியில் இவர்கள் தொழிலுக்காக அமர்த்தப்பட்டிருந்தனர். அங்கு வாடி நிர்வாகிகளால் பல்வேறு சித்திரவதைக்குள்ளான இச்சிறுவர்கள் அங்கிருந்து மூன்று தினங்களுக்கு முன்னர் தப்பி

(12 ஆம் பக்கம் பார்க்க)

## "தமிழின உயிர்க்கொலை நாள்" மட்டக்களப்பில் அனுஷ்டிப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை "தமிழின உயிர்க்கொலை நாள்" நினைவு கூரப்படவுள்ளது.

மட்டக்களப்பு மாவட்டத்தில் முழுத் துக்கநாளாக இதனைக் கடைப்பிடிக்குமாறு மட்டக்களப்பு மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

1990 ஆம் ஆண்டு செப்ரெம்பர் மாதம் 5 ஆம்திகதி வந்தாறுமூலை கிழக்குப் பல்கலைக்கழக அகதி முகாமில் தஞ்சமடைந்திருந்த பொதுமக்களில் 158 பேர் படையினரால் கொலை செய்யப்பட்டனர்.

இதேபோன்று, மட்டக்களப்பு மாவட்டத்தில் புதுக்குடியிருப்பு, புல்லுமலை, கொக்கட்டிச்சோலை, சத்துருக்கொண்டான், சித்தாண்டி, மயிலந்தனை ஆகிய இடங்களிலும் பல நூற்றுக் கணக்கானோர் படையினரால் சுட்டுக்கொல்லப்பட்டனர்.

இவ்வாறு கொல்லப்பட்டவர்களை நினைவுகூரும் வகையிலேயே எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை "தமிழின உயிர்க்கொலை நாள்" அனுஷ்டிக்கப்படவுள்ளது. (ந-க,64)

## நூறு தாய்மாருக்கு பயிற்சிக் கருத்தரங்கு

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் தாய்,சேய் நலனை மேம்படுத்தும் நோக்கில் சங்கானை, தெல்லிப்பழை சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலிருந்து தெரிவுசெய்யப்பட்ட 100 தாய்மாருக்கு குடும்பத் திட்டம், போசாக்குப் போன்ற விடயங்களில் விசேட பயிற்சிக் கருத்தரங்கு போரூட் நிறுவனத்தின் அனுசரணையுடன் நடாத்தப்படவுள்ளது.

இப்பயிற்சிக் கருத்தரங்கு தலா 25 பேர் வீதம் நாலு அமர்வுகளில் நடத்தப்படவுள்ளதாகவும், இக்கருத்தரங்கில் ஒவ்வொரு பொதுச் சுகாதாரப் பிரிவுகளிலிருந்தும் மூன்று தாய்மார் வீதம் தெரிவுசெய்யப்பட்டு பயிற்சிகள் வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இத்திட்டத்தின் கீழ் நடாத்தப்படும் முதலாவது பயிற்சிக் கருத்தரங்கு எதிர்வரும் 15ஆம் திகதி முதல் மூன்று நாட்கள் சங்கானை சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சித் திட்டத்தில் கலந்து கொள்ளும் தாய்மாருக்கு விசேட கொடுப்பனவுகளும் வழங்கப்படவுள்ளது. இதன் முதல் கட்டத்தில் இப்பகுதிகளைச் சேர்ந்த 50 சுகாதாரத் தொண்டர்களிற்கும் இவ் விடயங்களில் போரூட் நிறுவனம் பயிற்சிகளை வழங்கியிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ந-252)

## இராணுவ அதிகாரிகள் மூவருக்கு புதிய நியமனம்

(கொழும்பு)

இராணுவ உயர் அதிகாரிகள் மூவருக்கு புதிய நியமனங்கள் வழங்கப்பட்டுள்ளதாக இராணுவ தலைமையகம் தெரிவித்துள்ளது.

மேஜர் ஜெனரல் யூ.பி.எல். பெர்னாண்டோ யாழ்ப்பாணத்திற்கான 51 ஆவது படைப்பிரிவின் கட்டளை தளபதியாகவும், மேஜர் ஜெனரல் பிரிகேடியர் பி.சந்திரவன்ச தொண்டர் படைப்பிரிவின் தலைமை உத்தியோகத்தராகவும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரிகேடியர் இரட்ணசபாபதி வன்னிப் பாதுகாப்புப் பிரிவிற்கான தலைமையகத்தின் பிரதான சிவில் ஒருங்கிணைப்பு அதிகாரியாகவும் நியமிக்கப்பட்டுள்ளார்.

இந்நியமனங்கள் கடந்த புதன் கிழமைமுதல் அமுலுக்கு வந்துள்ளது எனவும் படைத்தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளது.(ந-க,60)

## அழகெழல் -2004 போட்டி முடிவுகள்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசியக் கல்வியியற் கல்லூரியின் நுண்கலை மன்றத்தினால் நடாத்தப்பட்ட அழகெழல் போட்டியில் 3 இடங்களையும் பெற்ற மாணவர்களின் பெயர் விபரங்கள் வருமாறு.

**சித்திரம் - (தரம்4,5)**

ச.சிவமைந்தன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), மா.சோஜுஜா (உசன் இராமநாதன் மகாவித்தியாலயம்), ம.இனியாள் (மகாஜனாக் கல்லூரி)

**சித்திரம் - (தரம்6,7,8)**

து.தணிகைக்குமரன் (உரும்பிராய் சைவத்தமிழ் வித்தி), சி. கௌசல்யன் (சென்.ஜோன்ஸ் கல்லூரி), வி.சாரதாதேவி (திருக்குடும்ப கன்னியர்மடம்)

**சித்திரம் - (தரம்9,10,11)**

கு.ராகுலன் (குப்பிளான் விக்னேஸ்வரா மகா வித்தி.), அ.ஜோன் ஜிபபிரினனோ (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி), செ.பிரகாஸ் (ஹாட்லிக் கல்லூரி), கு.குஜந்தி (ஊர்காவற்றுறை புனித மகளிர் வித்தி)

**சித்திரம் - (தரம் 12,13)**

த.தஜேந்திரன் (கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி), ர.சுதன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), மு.நிசாளினி (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), க.சுஜே (சாவகச்சேரி இந்துக் கல்லூரி)

**ஆசிரியர்களுக்கான ஓவியப்போட்டி**

செ.சிறிலோகநாதன் (புனித பத்திரிசியார் கல்லூரி), கி.சுதேஸ் (விக்னேஸ்வராக் கல்லூரி), எம். யசீர மியாத் (வைத்தீஸ்வராக் கல்லூரி), க.தவராசன் (ஸ்ரீசோமஸ்கந்த கல்லூரி)

**சிறுவர் நாடகப்போட்டி**

1ஆம் இடம்: நெல்லியடி மெ.மி.த.க. பாடசாலை.

1ஆம் இடம்: அச்செழு சைவப் பிரகாச வித்தியாலயம்.

3ஆம் இடம்: நவாலி மகாவித்தியாலயம்.

**தனி நடிப்புப்போட்டி**

கே.செந்தில்ராஜன் (யூனியன் கல்லூரி), இ.ஸ்ராலின் (பண்டத்தரிப்பு இந்துக் கல்லூரி), சா.சந்துரு (சென்.ஜோன்ஸ் கல்லூரி)

**கிராமிய நடனம்**

1 ஆம் இடம்: இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.

2 ஆம் இடம்: தெல்லிப்பழை மகாஜனாக் கல்லூரி.

3ஆம் இடம்: கொட்டடி நமசிவாயம்.

**கிராமிய இசை அபிநயப் பாடல் போட்டி**

**பரிசுக்குரிய குழுவினர்**

1ஆம்இடம்: யா/இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை.

2ஆம்இடம்: யா/சென்.ஜோன் பொஸ்கோ வித்தியாலயம்.

3ஆம்இடம்: யா/மானிப்பாய் விவேகானந்தா வித்தியாலயம். (ந-க)

## வருடாந்த மஹோற்சவம்

(பொன்னாலை)

வட்டுக்கோட்டை அராலி மேற்கு நொச்சியம்பதி சித்திவிநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

எதிர்வரும் 12 ஆம்திகதி சப்பறத திருவிழாவும், 13 ஆம் திகதி இராதோற்சவமும், மறுநாள் தீர்த்தோற்சவமும் இடம்பெறவுள்ளன. (ந-49)

## கேணல் ராஜு வின் நினைவு தினம்

(பொன்னாலை)

விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் ராஜுவின் இரண்டாம் ஆண்டு நினைவு தின நிகழ்வும், உடுவில் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினரின வீரமுரசு நிகழ்வும், ஏழாலை மகாவித்தியாலய மைதானத்தில் எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை இரவு 7.30 மணிக்கு நடைபெறவுள்ளன.

உடுவில் பிரதேச தேசிய எழுச்சிப் பேரவையினரின் ஏற்பாட்டில் நடைபெறவுள்ள இந்நிகழ்வில் சகல பிரதேச மக்களையும் கலந்துகொள்ளுமாறு உடுவில் பிரதேச தேசிய எழுச்சிப்பேரவை கேட்டுள்ளது. (ந-49)

## ஒருங்கிணைப்புக் குழு கூட்டம்

(சங்கானை)

வலி.மேற்கு பிரதேச செயலகத்தினால் நடாத்தப்பட்டுவரும் மாதாந்த ஒருங்கிணைப்புக் குழுக கூட்டம் எதிர்வரும் 9ம் திகதி வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு பிரதேச செயலர் காரியா லயத்தில் நடைபெறவுள்ளது. (ந-க.20)

## பொது மண்டப திறப்பு விழா

(யாழ்ப்பாணம்)

குடத்தனையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள நியாப்பின் பொதுமண்டப் திறப்புவிழாவும், தையல் பயிற்சி ஆரம்ப நிகழ்வும் இன்று சனிக்கிழமை காலை 10 மணிக்கு வடமராட்சி கிழக்கு உதவி அரசாங்க அதிபா வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். மாவட்ட அரச அதிபர் செ.பத்மநாதனும், சிறப்பு விருந்தினர்களாக யாழ். மாவட்ட பிரதித் திட்டப் பணிப்பாளர் கா.பாலகிருஷ்ணன், யாழ். மாவட்ட உதவி அரசாங்க அதிபர் வே.வீரபத்திரப் பிள்ளை, கடற்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் பூரணி, வடமராட்சி கிழக்கு உதவித் திட்டமிடல் பணிப்பாளர் க.ஈஸ்வரபாதம், கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர் எல்.எச்.ஜே.சீவரட்ணம், வடமராட்சி கிழக்கு புனர்வாழ்வு புனரமைப்பு தலைவர் சி.பொன்னம்பலம் மற்றும் வடமராட்சி கிழக்கு அரசியல் துறைப்பொறுப்பாளர் ஆர்.தீபன், வடமராட்சி கடற்புலிகளின் மகளிர் அரசியல்துறைப் பொறுப்பாளர் எம். கல்யாணி ஆகியோரும் கலந்து கொள்ளவுள்ளனர். (ந-19)

## நற்சரிதம் நூல் வெளியீடு

நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன முதலாவது குருமஹா சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ சுவாமிநாததேசிக ஞானசம்பந்த பரமசார்ய சுவாமிகளின் வாழ்க்கைச் சரிதம் நூல் நாளை ஞாயிற்றுக்கிழமை நல்லை ஆதீனத்தில் நடைபெறவிருக்கும் பீடாரோஹண விழாவில் வைத்து வெளியிடப்படவுள்ளது.

சைவப் புலவர் இராசையா ஸ்ரீதரனின் உருவாக்கத்தில் வெளிவருகின்ற 'நல்லை ஆதீன முதல்வரின் நற்சரிதம்' நூலின் முதற் பிரதியை சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தபிள்ளை பெற்றுக் கொள்வார். (ச)

## அருள்ஒளி வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

ஸ்ரீதுர்க்காதேவி தேவஸ்தானத்தினால் மாதாந்தம் வெளியிடப்பட்டு வரும் 'அருள்ஒளி' ஆவணி மாத இதழ் அண்மையில் வெளிவந்துள்ளது. (ந,க)

## மீளமைக்கப்பட்ட மதமாற்றத்தடைச்சட்ட மூலம் விரைவில் சமர்ப்பிக்கப்படும்

(கொழும்பு)

உயர் நீதிமன்றத்தின் விதந்துரைகளுக்கு அமைவாக மீளமைக்கப்பட்ட மதமாற்றத் தடைச்சட்ட மூலம் பாராளுமன்றத்தில் சமர்பிக்கப்படும் என ஜாதிக ஹெல உறுமயவின உபதலைவா ஒபல்வே சோபித தேரர் தெரிவித்துள்ளார்.

மதமாற்றத் தடைச்சட்ட மூலத்தினைப் பரிசீலனை செய்த உயர் நீதிமன்றம் அதன் சில சரத்துக்களில் உள்ள குறைபாடுகளைச் சுட்டிக் காட்டியிருந்தது.

இதற்கமைவாக குறைபாடுகள் மற்றும் மதவாதங்கள் களையப்பட்ட சட்டமூலம் விரைவில் நாடாளுமன்றில் சமர்ப்பிக்கப்படும் எனத் தெரிவித்துள்ள சோபித தேரர், மதமாற்றத் தடைச சட்டமூலத்தின் அடிப்படைக் கொள்கைகள் எந்த விதத்திலும் மாறுபடாது என்றார். (ப)

## கட்டடப் பொருள் உற்பத்தியில் புதிய தொழில்நுட்ப உத்திகள்

(கொழும்பு)

கட்டடப் பொருள் உற்பத்தி நிறுவனங்களுக்கு உதவுவதற்கென கைத்தொழில் அபிவிருத்திச்சபை நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

கட்டடப் பொருள் உற்பத்திக்கான புதிய தொழில்நுட்பங்கள் இன்னமும் நாட்டில் அறிமுகம் செய்யப்படவில்லை

இதனால் நாட்டின் கட்டடப் பொருள் உற்பத்திகளில் தரவேறுபாடுகள் காணப்படுகின்றன.

இவற்றைப் போக்கி தரம்வாய்ந்த கட்டடப் பொருடகளை உற்பத்தி செய்வதற்காகவே இத்தகைய புதிய தொழில்நுட்பங்கள் புகுத்தப்படவுள்ளன.

இதனடிப்படையில் இலாபகரமான கட்டடப் பொருள் உற்பத்தி வழிமுறைகளும் அறிமுகம் செய்யப்படவுள்ளன. (ந,[illegible]

## மீதிப் பணம் கேட்ட பயணி ஒருவரை வாள்கொண்டு மிரட்டினார் நடத்துனர்

(கொழும்பு)

பயணக் கட்டணத்தின் மீதிப் பணத்தை தருமாறுகேட்ட பயணி ஒருவரை வாள்கொண்டு வெட்டப் போவதாக மிரட்டிய நடத்துனர் ஒருவர் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார்.

நேற்றுக்காலை மாதவப்பிட்டியவிலிருந்து மாத்தளை நோக்கிச் சென்றுகொண்டிருந்த பஸ்வண்டியில் இடம்பெற்ற இச்சம்பவம் பற்றி மேலும் தெரியவருவதாவது,

மேற்படி பஸ்ஸில் சென்றுகொண்டிருந்த பயணி ஒருவர் தான் இறங்க வேண்டிய இடம் நெருங்கிவிட்டதால் ஏற்கனவே தான் கொடுத்த பணத் தொகையிலிருந்து வழிச் செலவுக் கட்டணத் தொகையை எடுத்துவிட்டு மீதியைத் தருமாறு நடத்துனரைக் கேட்டுள்ளார்.

எனினும், மீதிப் பணத்தை பயணியிடம் கொடுக்கமறுத்த நடத்துனர் அவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டிருந்தார்.

இதன்பின் பஸ்ஸினுள் ஏற்பட்ட குழப்பநிலையை அடுத்து ஆத்திரமடைந்த பஸ் நடத்துனர் பஸ்ஸினுள் மறைத்துவைத்திருந்த மூன்றடி நீளமான வாள்ஒன்றை எடுத்து சம்பந்தப்பட்ட பயணியை வெட்டிக் கொல்லப்போவதாக மிரட்டினார்.

இதையடுத்து ஓடும் பஸ்ஸிலிருந்து குதித்துத் தப்பியோடிய பயணிகள் பொலிஸாரிடம் முறையிட்டதைத் தொடர்ந்து அந்த பஸ்ஸின் நடத்துனரை பொலிஸார் கைது செய்துள்ளனர். (ப)

## இலங்கை இந்திய கப்பல் சேவை தற்போதைக்கு சாத்தியமில்லை

(கொழும்பு)

பொருத்தமான பாதுகாப்புப் பின்னணி உறுதிசெய்யப்படும் வரை இலங்கை -இந்திய நாடுகளுக்கிடையில் கப்பல் சேவையை ஆரம்பிப்பது சாத்தியமற்றது என தமிழக அரசு அறிவித்திருக்கிறது.

தலைமன்னாருக்கும் கொச்சினுக்குமிடையே கப்பல் சேவையை நடத்துவது இந்தியாவிற்கு அச்சுறுத்தலாக அமைவதால், இது குறித்து அதிக கவனம் செலுத்தப்படல்வேண்டும். குறிப்பாக, விடுதலைப் புலிகளின் செயற்பாடுகள் இதற்குப் பெரும் அச்சுறுத்தலாக அமையும் எனத் தமிழக முதல்வர் ஜெயலலிதா ஜெயராம் தெரிவித்துள்ளார்.

இந்தக் கப்பல் சேவையை நடத்துவதற்காக பொறுமை காப்பது இந்தியாவின் பாதுகாப்பை மேலும் உறுதிப்படுத்துவதாக அமையும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ப)

## அகில இலங்கை சதுரங்கப் போட்டி

(நல்லூர்)

அகில இலங்கை ரீதியாக நடைபெறும் சதுரங்கப் போட்டியில் வடக்கு-கிழக்கு மாகாண மட்டத்தில் வெற்றி பெற்ற அணிகள் பங்குபற்றவுள்ளன.

இப்போட்டிகள் இன்றும் நாளையும் நாளை மறுதினம் 4,5,6 ஆம் திகதிகளில் கொழும்பு றோயல் கல்லூரியில் அகில இலங்கை சதுரங்க சம்மேளனத்தில் நடாத்தப்படுகிறது.

மாகாணமட்டப் போட்டியில் 19 வயதுக்குட்பட்ட ஆண்கள் அணியில் முதலாம் இடத்தை யாழ். இந்துக் கல்லூரியும், இரண்டாம் இடத்தை தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியும் பெற்றன. பெண்கள் பிரிவில் வேம்படி மகளிர் கல்லூரி முதலாம் இடத்தையும், புதுக்குடியிருப்பு மகாவித்தியாலயம் இரண்டாம் இடத்தையும் பெற்றன.

15 வயதிற்குட்பட்ட ஆண்கள் பிரிவில் யாழ் இந்துக் கல்லூரி முதலாம் இடத்தையும், திருகோணமலை கோணேஸ்வரா இந்துக்கல்லூரி இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன. பெண்கள் பிரிவில் நெல்லியடி மத்திய மகா வித்தியாலயம் முதலாம் இடத்தைப் பெற்றது. (ந-115)

# ஜனாதிபதி தனது அதிகாரத்தின் மூலம் இடைக்கால நிர்வாகத்தை புலிகளிடம் வழங்க வேண்டும்!

## கிஷோர் எம்.பி. கோரிக்கை

வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பினை வழங்கும் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வினது வேலை வழங்கும் திட்டத்தை வரவேற்கும் அதேநேரம், அவரது துணிவையும் பாராட்டு கின்றோம் என்று வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவநாதன கிஷோர் தெரிவித்துள்ளார்.

வவுனியா நகரசபை மண்டபத்தில் வவுனியா அரச அதிபர் கே. கணேஷ் தலைமையில் நேற்று முன் தினம நடைபெற்ற பட்டதாரி களுக்கு நியமனக்கடிதங்கள் வழங்கும் வைபவத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இவ் வைபவத்தில் அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது,

வேலையற்ற பட்டதாரிகளுக்கு துணிவுடன் வேலை வழங்கிறது போல தனது அதிகாரத்தைப் பயன்படுத்தி வடக்கு-கிழக்கு இடைக்கால தன்னாட்சி அதிகார சபையை வழங்கி தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்குமாறு அவரை தான் கேட்டுக் கொள்கிறேன் என்று கிஷோர் எம்.பி.தெரிவித்துள்ளார்.

வவுனியா மாவட்டத்தில் இருந்து 168வேலையற்ற பட்டதாரிகளுக்கும், மட்டக்களப்பு மாவட்டத்தில் இருந்து 376 வேலையற்ற பட்டதாரிகளுக்கும், யாழ்.மாவட்டத்தில் இருந்து 532 வேலையற்ற பட்டதாரிகளுக்கும் நேற்று முன்தினம் முதற்கட்ட நியமனக் கடிதங்கள் வழங்கப் பட்டமை குறிப்பிடத்தக்கது. (ம)

# வெளிநாட்டு இராஜதந்திரிகளாக 11 பேர் விரைவில் நியமனம்

(கொழும்பு)

இலங்கையின் வெளிநாட்டு இராஜதந்திர சேவைகளுக்காக பிரேரிக்கப்பட்ட தூதுவர்கள் மற்றும் உயர்ஸ்தானிகர்கள் 11பேரின் பெயர்களை ஜனாதிபதி அங்கீகரித்துள்ளார்.

இவர்களில் பெரும்பாலானோர் இராஜதந்திர சேவையில் இணைந்திருந்த சிரேஷ்ட உத்தியோகத்தர்கள் என்பது குறிப்பிடத்தக்க விடயமாகும்.

நீண்டகால இடைவெளிக்குப் பின்னர் ஒரே தடவையில் அதிக எண்ணிக்கையானோர் இராஜதநதிர சேவைகளுக்கான உயர் நியமனங்களைப் பெறுகின்றார்கள்.

ஜனாதிபதியின் அங்கீகாரம் பெற்ற பெயர்ப்பட்டியலை உயர் அதிகாரிகளை நியமிக்கும் பாராளுமன்றக் குழு ஊர்ஜிதம் செய்த பின்னர் நியமனக் கடிதங்கள் உரியவர்களுக்கு வழங்கப்படும் என வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு தெரிவித்துள்ளது.

(ந-யே)

# பாடசாலைகளில் ஒழுக்கத்தைப்பேண பொலிஸாரின் உதவி பெறப்படவுள்ளது

(கொழும்பு)

நாட்டில் உள்ள பாடசாலைகளில் ஒழுக்கத்தைப்பேண பொலிஸாரின உதவியைப் பெற்றுக் கொள்ளப் போவதாகத் தேசிய பாடசாலைகளின் பணிப்பாளர் பி. எஸ்.ஜீகனகே தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான பேச்சுவார்த்தையொன்றும் கடந்த புதன்கிழமை கல்வியமைச்சில் நடைபெற்றது. இதன் அடிப்படையிலேயே பொலிஸாரின் ஆலோசனைத் திட்டங்களை பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

முதற்கட்டமாக இத்திட்டம் 6 பாடசாலைகளில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளது.

இதன்படி, கொழும்பு றோயல் கல்லூரி, ஆனந்தா நாலாந்தா, டீ. எஸ்.சேனாநாயக்க கல்லூரிகள் என்பவற்றில் இது நடைமுறைக்குக் கொண்டுவரப்படும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

(ந-க.8)

# கிராம உத்தியோகத்தர் சேவை பொதுமக்களுக்கு மேலும் விஸ்தரிப்பு

(கொழும்பு)

கிராமசேவை உத்தியோகத்தர்களிடம் இருந்து பொதுமக்கள் கூடுதலான சேவையைப் பெற்றுக் கொடுப்பதற்கு ஏதுவாக, 300குடும்பங்களை உள்ளடக்கி தலா ஒரு கிராமசேவை உத்தியோகத்தரை நியமிக்க நடவடிக்கை எடுத்துள்ளதாக பொது நிர்வாக அமைச்சர் அமரசிறி தொடங்கொட தெரிவித்துள்ளார்.

அதற்கு முன்பாக கிராம சேவை உத்தியோகத்தர்களுக்கான ஆயிரத்து 300பதவி வெற்றிடங்கள் விரைவில் நிரப்பப்படவுள்ளன.

இதேவேளை, குறித்த உத்தியோகதர் தமக்கு உரித்தான பிரதேசத்திலேயே வசிப்பது கட்டாயமாக்கப்படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார். (ந-க,60)

# மார்பகப் புற்றுநோயாளர்களுக்கு புதிய தொழில்நுட்பம் மூலம் சிகிச்சை

(கொழும்பு)

மாபுப் புற்றுநோயால் அவதிப்பட்டுவரும் பெண்கள் இனிமேல் தங்கள் பாதிக்கப்பட்ட மார்பகத்தை அகற்றும்தேவை ஏற்படாது. அதற்கேற்றவகையில் தாம் வெற்றிகரமாக அதற்கு சிகிச்சை அளித்து வருவதாக நாட்டின் முன்னணி புற்றுநோய் வைத்திய நிபுணர் தெரிவித்துள்ளார்.

தற்போது தாமே கண்டுபிடித்த தொழில்நுட்பத்தைக் கொண்டு பாதிக்கப்பட்ட உறுப்பை அகற்றாமல் வெற்றிகரமாக சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

முன்னர் பாதிக்கப்பட்ட புற்றுநோய் ஏற்பட்ட இழையத்தை முற்றாக அகற்றியே அதற்கு சிகிச்சை அளிதது வந்ததாகவும் தற்போது அவ் உறுப்பை அகற்ற வேண்டி இருககாது எனவும் பாலவர்த்தன எனும் அந் நிபுணர் தெரிவித்துள்ளார்.

ஆனால், மார்ப்புற்று நோயின் ஆரம்பகாலத்தில் தான் இதனை குணமாக்க முடியும். இவர்களுக்கான புதிய சிகிச்சையின் ஒத்திகை இலண்டன் றோயல மார்ஸ்டன், புனித பார்தோலோமியா வைத்தியசாலைகள் ஆகியன இணைந்து நடத்தியிருந்தன. இதன பெறுபேறுகள் யாழ்ப்பாணத்தில் கடந்த மாதம் 28ஆம் திகதி வி.ரி.பசுபதி ஞாப கார்த்த உரையில் தெரிவிக்கப்பட்டிருந்தன.

இதன்படி, நோயாளிகளுக்கு மார்பகம் பாதிக்கப்பட்டவுடன் அதனை அகற்றாமல் இச் சிகிச்சையைப் பெற்றுப் பயனடைய உதவுமாறு ஏனைய வைத்தியர்களையும் அவர் கேட்டுள்ளார். (ந-6)

# எந்தப் பிரச்சினைக்கும் பேச்சுமூலம் தீர்வுகாண அரசு தயாராகவுள்ளது

## பிரதமர் மகிந்த தெரிவிப்பு

(கொழும்பு)

எந்தவொரு பிரச்சினை ஏற்பட்டாலும் அதனைப் பேச்சுவார்த்தை மூலம் தீர்த்துக்கொள்ள ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் தயாராகவுள்ளது என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற வைபமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இலகுவாகத் தீர்த்துக்கொள்ளக் கூடியதாகவிருந்த பிரச்சினைகள் பல இன்று தீர்க்கப்பட முடியாதவையாக மாறியுள்ளன.

வரலாற்றில் நிகழ்ந்த சம்பவங்களால் ஏற்பட்டுள்ள கட்டுப்படுத்த முடியாத பிரச்சினைகள் சிலவற்றை கூட்டமைப்பு அரசாங்கம் தற்போது எதிர்கொள்ள வேண்டியேற்பட்டுள்ளது.

வாழ்க்கைச் செலவு அதிகரிக்கும் போது ஏற்படுகின்ற சுமையினை மக்கள் மீது சுமத்த அரசாங்கம் இடமளிக்காது என அவர் மேலும் தெரிவித்தார். (ந-121)

# மீண்டும் நாட்டில் யுத்தம் ஏற்படுமாயின் அரசு பாரிய பின்னடைவுகளை சந்திக்கும்

## ஜெயானந்த மூர்த்தி எம்.பி.எச்சரிக்கை

(மட்டக்களப்பு)

தமிழீழ விடுதலைப் புலிகள் பலவீன மடைந்துவிட்டதாக எவரும் கருதக்கூடாது. அவர்கள் மிகவும் பலமடைந்துகொண்டே வருகின்றார்கள்.

மீண்டும ஒருயுத்தம் ஏற்பட்டால் இலங்கை அரசாங்கம் மிக மோசமான பின்னடைவுகளையே எதிர் கொள்ளும் என மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெயானந்த மூர்த்தி தெரிவித்துள்ளார்.

பட்டதாரிகளுக்கான பயிற்சி ஆரம்ப நிகழ்வு மட்டக்களப்பு கல்லடி சுவாமிவிபுலாநந்த இசை நடனக் கல்லூரி மண்டபத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற போது, அந்நிகழ்வில் கலந்துகொண்டு பேசுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

அவர் அங்கு தொடர்ந்தும் பேசுகையில்,

விடுதலைப்புலிகள் மிகவும் பலமடைந்து விட்டார்கள். அதனாலேயே சமாதானப் பேச்சிற்கு உடன்பட்டுள்ளார்கள் என எவரும் எண்ணககூடாது.

தமிழீழ விடுதலைப்புலிகளின் இடைக்கால நிாவாக சபைகுறித்த யோசனைகளை ஜே.வி.பி.யினரும் ஜாதிகஹெல உறுமயக் கட்சியினரும் எதிர்த்து தென்னிலங்கையில் கடும் பிரசாரம் செய்து வருகின்றனர்.

இவர்களின் இந்தப் பிரசார நடவடிக்கைக்கு எதிராக தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு நாடளாவிய ரீதியில் பிரசாரங்களை மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளது.

இதன்மூலம் தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபைக் கோரிக்கையின் நியாயப் பாட்டினை அரசுக்கும், சர்வதேசத்திற்கும் எடுத்துக்கூறப்பட்டுள்ளது எனத் தெரிவித்தார். (ந-க)

# பொலிஸ் ஆணைக்குழுவை ஐ.தே.க. பாதுகாக்கும்

## கட்சியின் பிரதித் தலைவர் தெரிவிப்பு

(கொழும்பு)

ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் ஆட்சிக் காலத்திலேயே நாடு குழப்படைந்து, நீதியும், ஒழுக்கமும் சீர்குலைந்து காணப்படுவதாக ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் கருஜெயசூரியா குற்றஞ்சாட்டியுள்ளார்.

கொழும்பில் கடந்த செவ்வாய்க்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே அவர் இதனை வலியுறுத்திக் கூறியுள்ளார்.

நாட்டில் கடந்த சில நாட்களாக கொள்ளைகள் உட்பட வன்செயல்கள பல இடம்பெற்றுள்ளன. அவற்றைத் தடுத்து நிறுத்த பொலிஸார் பல நடவடிக்கைகளை எடுத்துள்ளனர்.

ஆனால் இதுதொடர்பில் பொலிஸ் ஆணைக்குழுவின் மீது பல தரப்பட்ட குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்பட்டுள்ளது.

எனவே பொலிஸ் ஆணைக்குழுவினைப பாதுகாக்க ஐக்கிய தேசியக்கட்சி நடவடிக்கை எடுக்கும் எனத் தெரிவித்தார்.

இதேவேளை, இம்மாநாட்டில் கலந்துகொண்ட பாராளுமன்ற உறுப்பினர் பந்துலகுணவர்த்தன ஆடை ஏற்றுமதி சோடாமுறை அடுத்த வருட முடிவுக்கு வருவதால் ஒரு இலட்சத்து 50ஆயிரம் வேலைவாய்ப்புக்கள் அற்றுப் போகும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

(ந-க,121)

# பயிற்சி வகுப்புக்கள்

(இணுவில்)

உடுவில் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் க.பொ.த.சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றவுள்ள மாணவர்களுக்கு விசேட வலுவூட்டல் பயிற்சி வகுப்புக்கள் நடததப்படவுளளதாக கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் தெரிவித்துள்ளார்.

இணுவில் இந்துக்கல்லூரி, சுன்னாகம இராமநாதன் கல்லூரி, சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரி, உடுவில் முருகமூர்த்தி வித்தியாலயம் மற்றும் ஏழாலை சைவ மகாஜனாக் கல்லூரி ஆகிய பாடசாலைகளில் சனி, ஞாயிறு தினங்களில் இப்பயிற்சி வகுப்புக்கள் நடாத்தப்படவுள்ளது.

(ந-க,122)

# போட்டோ பிரதி இயந்திரம் பழுது

(பருத்தித்துறை)

பருத்தித்துறை காணிப்பதிவகத்தில் உள்ள போட்டோப் பிரதி இயந்திரம் பழுதடைந்துள்ளமையினால் இவ் அலுவலகத்திலிருந்து பிறப்பு, இறப்பு, திருமண அத்தாட்சிப் பத்திரங்களைப் பெறுவதில் பொது மக்கள் பலத்த இன்னல்களை அனுபவித்து வருகின்றனர்.


இந்தப போட்டோப் பிரதி இயந்திரத்தைத் திருத்தி மீண்டும் செயற்படவைக்க உரிய அதிகாரிகள் விரைவில் நடவடிக்கைகளை எடுக்க வேண்டுமெனப் பாதிக்கப்பட்ட பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

(ந-52)





நேற்று முன்தினம் இந்தியாவில் இருந்து விஜயம் செய்த முன்னாள் விரிவுரையாளர் சங்கீத பு,சணம் ஏ.எஸ். ராமநாதன் அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு இராமநாதன் நுண்கலைக்கழக இசைத்துறையில் நடைபெற்ற போதும், கலந்துகொண்ட வளாக மாணவ மாணவிகளையும் படத்தில் காணலாம்.



# வியாழ மாற்றம் உங்களுக்கு எப்படி?

(நேற்றைய தொடர்ச்சி)

## கும்பம்



15.08.2004 முதல் 28.09.2004 வரை

தொழில் வழி தூரதேச கடிதம் வருவது பழைய விஷயங்கள் சிலவற்றை புதுப்பிக்க உதவியாக இருக்கிறது. பூர்விக சொத்து கட்டிய கட்டிடம் இவைகளில் முக்கியமான மாற்றம் செய்ய வேண்டி வரும். ஒப்பந்தம் போன்ற வகையில் நீங்கள் வெற்றி உடையவர்கள், இப்போது இந்த ராசி பெண்களுக்கு முக்கிய பிரயாணம் இருக்கிறது. ஆபரண சேர்க்கை புட்டு உடைகள் சேர்க் கையும் உண்டாகும். போட்டி, பந்தயம், விளையாட்டு வகைகள் ஆதாயத்தைக் கொடுக்கும். அரசியல்வாதிகளுக்கு கௌரவப் பதவி வருதலும் மகிழ்ச்சிகரமான போக்கும் உண் இப்போது நெருக்கமாக இருக்கும். விட்டுப்போன உறவு ஒன்று கூடும் கணவன மனைவி உறவும் இப்போது தெளிவுபட ஆரம்பித்துவிட்டன. புகைந்து கொண்டிருந்த விஷயம் வெடித்து உண்மை வெளியாகும் மாதம் இது.

**அதிர்ஷ்ட எண்கள்: 4, 2, 8**

**அனுகூல திக்கு: வடக்கு**

**28.09.2004 முதல் 11.11.2004 வரை**

சிறப்பு தன்மையை வெளிப்படுத்தும் நண்பர் அல்லது உறவினர் இல்லங்களில் குடும்பத்துடன் சேர்ந்து விருந்துண்பது உண்டாகும். நண்பர்களை சந்திப்பது மறைந்திருந்த விஷயங்களை அறிவது மகிழ்ச்சியான சூழ்நிலையை உருவாக்கும். செய்தொழில் வழியில் சிறப்பு அம்சங்கள் பிறரால் பாராட்டப்படும். கொடுக்கல் வாங்கலில் கடந்த மாதம் இருந்து வந்த நெருக்கடிகளை தீர்த்து விடுவீர்கள். குடும்பத்திற்கு வேண்டிய நாகரிகப் பொருட்கள் வாங்குவது, சுப விசேடங்களில் கலந்து கொள்வது விருந்துண்பதும் குறிப்பாக நல்ல பலன்களாகும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு காலம். கடந்து பிரச்சினைகள் சில எழுத்து மூலம் நன்மைகளாகும் கணவன், மனைவி உறவு கண்ணியம் உடையதாக இருக்கிறது. போட்டி, பந்தயம், விளையாட்டு போன்ற வழிகளில சிறு சிறு ஆதாயங்களும் இருக்கின்றன. வழக்கு பாதிப்பு ஒன்றும் செய்யாது. இதே வேகம் தொடர்ந்து நீங்கள் போடும் அடித்தளமாக இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. உங்கள் அவசர பிரச்சினைகள் எல்லாம் தொடர்ந்து முடிந்து விடும். கடந்த மாதம் இருந்த பிரச்சினைகள் அடியோடு மறைந்து நன் நம்பிககையின் எல்லைக்கு இப்போது வந்து

நாகரிக வாகனம் வாங்குவது அல்லது மாற்றி அமைப்பது உண்டாகும். நண்பர் உறவினர் இல்லங்களுக்குச் சென்று வருதல் விருந்துண்பதும் இருக்கும். உத்தியோகப் பிரிவு உயர்மட்டத்திலும் சரி கீழ் மட்டத்திலும் சரி இருப்பவர்களுக்கும் இதுவே நீங்கள் எப்போதோ செய்த செயல் இப்போது தான் மற்றவர் கவனத்தை ஈர்த்து இருக்கிறது.அதன் விளைவுதான் விரும்பத்தகாத சூழ்நிலை உருவாகி உங்களுக்கு தொல்லை கொடுப்பதாக இருக்கிறது. உங்களுக்கு மேல் இடத்தில் உள்ளவர் எழுத்து வகையில் சில சிக்கலை உள்ளாக்காமல் புத்திரர், புத்திரியர்கள் கல்வி புகழ் தருவதாக அமைந்திருக்கும். சிலர் பூர்வீக இம் விட்டு புகுவதும் இருக்கும். வழக்கு இருந்தவை இப்போது மாறுபட்ட விட்டது என்பதை அறியலாம். மற்றும் புது வாகன சித்தியுடன் புண்ணியஸ் தல பிரயாணம் உண்டாகும். இந்த ராசி உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு சென்ற விடத்திலும் சிறப்புத் தன்மையுடையவர்களாக .இருப்பது மற்றவர்கள் மூலம் மலைபோல் புகழை சேர்க்கும் தன்மையுடையது. பழைய இல்லம் வாங்குவது அல்லது இல்லம் புதுப்பித்தல் போன்ற வகையில் செலவுகளை உடையர்களாக இருப்பர். மேலும் கலைப் பிரிவினர்கள் தன் புதிய முயற்சியின் மூலம் பாராட்டுக்களையும் பரிசுகளையும பெறக்கூடிய்வர்கள். காதல் கல்யாண சம்பந்தமான கடிதத் தொடர்பு கவர்ச்சிமிகீகதாக இருக்கும். இன்பக் கனவுகளையும் காட்டும். மாதமிது. கடல் வாழும் உறவினர்களையும் இப்போது சநதிக்கும் அவசியம் உண்டாகும். விவசாயிகளுக்கு கணிசமான தன ஆதாயத்தை உண்டாக்கும். கிரகங்கள் சனியும், சுக் கிரனும், காரம், இனிப்புப் பொருள்

போடடி, பந்தயம், விளை யாட்டு போன்றவைகள் ஓர் அளவு ஆதாயமாகவே இருககும். வாகனம் இயந்திர வகையில இருந்து வந்த சிக்கல் ஆதாயமாகவே இருக்கும். வழக்கு மூலம் தாமதப்பட்ட தொழில் சம்பந்தப்பட்ட வேலைகள் மீண்டும் வேகம் பெற ஆரம்பித்து விட்டன. சத்ருக்கள் சமாதான முயற் சியில் இருப்பர். கலைத் தொழில் உள் ளவர்களுக்கு எதிர்பாராத பெரிய ஒப்பந்தத்தைக் கொடுப்'பவை பாராட் டுக்களையும் உருவாக்கும். பெண்கள் வகைக்கு வெண்மைக்கல் ஆபரண சேர்க்கையும் உண்டாகும். இப்போது நடுப்பகுதிக்கு மேல் சில எதிர்பாரா கௌரவக் குறைவான போக்கு உதய மாகும். பெண்கள் ஆண்கள் வகையில் ஆண், பெண்கள் வகையிலும் முன் எச்சரிக்கையுடன் நடந்து கொளள வேண்டும். எப்போதோ நடந்த விஷயங் கள் சிலதும இப்போது முக்கிய இடம் பெறும். உங்கள் நாகரிக வாகனத்தை விற்பதும் இருக்கும். நண்பர் கள் மூலம் எதிர்பார்த்த பணமும் உரிய நேரத்தில் வந்து சேராது.

குரு திறமைக்கு தக்க பரிசையும் அளிப்பான் என்பது உறுதி. குடும்பத்தில் இனிமையான போக்கு தொடர்ந்து இருக்கும். நீங்கள் மிகவும் விறுவிறுப்பாக காணப' படுவீர்கள். வெளியூர் கடிதங்களுக்கு உடனுக்குடன் பதில் அளிக்கவும் தவறவில்லை. பணம் வர வேண்டியதற்கு அலைச்சல் இருப்பது போல் கொடுக்க வேண்டிய வகை யிலும் கவன ஈர்ப்பு இருக்கும். குடும்பத் தில் சுப செலவுகள் அதிகரித்து இருக்கும். உறவினர் வருகை விருந்து கொடுப்பது போன்றவைகள் இடம்பெறும். குடும்பத்தில் மூத் தவர்கள் வகை சீதள நோயால் பாதிப்பது, மருத்துவ செலவுகள் இடம் பெறுதல் போன்றவை இருக்கும். வாகன

டாகும். கணவன் மனைவி உறவு இனிமையாக இருக்கும். வ்ாகனம் வாங்குவதும் அல்லது புதுப்பித்தலும் உண்டாகும். ஆரம்பம் சற்று அலைச்சலாகவே இருக்கும். முக்கிய காரியங்களை முடிப்பதில் துரிதப்போக்கு உடையவராக இருப்பீர். விடுமுறையை கழிக்கச் செல்லும் இடத்தில் வினையைத் தேடிக் கொண்டு வராமல் இருந்தால போதும். செலவுகள் கடுமையாக உள்ள காலமிது. உறவினர் நண்பர்கள் இல்லத்தில் சுபவிசேடங்களில் கொள்வது விருந்துண்பதும் புதிய நண்பர்களைச் சேர்ப்பதும் குறிப்பிடத்தக்கது.

உறவினர்கள் மத்தியில் பாராட்டுகளைப் பெறுவீர்கள். கொடுக்கல் வாங்கல் குறித்தபடியே இருக்கும். பழைய ஆபரணம் வாகனம் போன்றவைகள் மாற்றல் உண்டாகும். கணவன் மனைவிக்கு வண்ண உடைகள் வாங்குவீகள் நாட்பட்ட வழக்கு இப்போது நடைமுறைக்கு வந்தாலும் வேகமில்லை. குழந்தைகள் கல்வி ஆரோக்கியம் இவைகள் நன்றாகவே இருக்கின்றன. எழுத்து மூலம் சில நன்மைகளையும் காணலாம். சகோதர சகோதரி வகையில் கருத்து வேறுபாடும் உண்டாகும். உத்தியோகப்பிரிவு ஆண், பெண்களுக்கு மறைந்திருந்த ரகசியங்கள் சில தொழில வகையில் அறியப்படும். குடும்பத்திற்கு நாகரிகப் பொருள் சேர்க்கை உண்டு. நம்பியவர்கள் மூலம் நல்ல தகவலும் வந்து சேரும். கூட்டு மனிதர் உங்களுக்கு அமைப்பாக இருப்பதால் தான் உங்கள முன்னேற்றம் தடையின்றி செல்கின்றது. உயர் ஆகார சேர்க்கை ஆடை அணிகலன்கள் சித்தியும் உணடாகும். கணவன், மனைவி உறவு கண்ணியமாக இயங்கி வரும். உத்தியோகப் பிரிவு ஆண், பெண்களுக்கு பதவி உயர்வு முதல் பழகும் மனிதர்களின் தன்மை வரை தற்போது மாற்றம் உடையதாகவே இருக்கினறன. பெண்கள் வகை தூரத்து கடிதம் மன மகிழ்ச்சியை உண்டாக்கும். குறை கூறிய அவர்கள் இப்போது போற்றவும் செயகிறார்கள. உறவினர் தொடர்பு விடுவீர்கள். கலைத் துறையினர் அரசியல்வாதிகளுக்கு கௌரவப் பதவி அல்லது கௌரவ உயர்வு உண்டாக்கும். தைரியமாக சகோதர சகோதரிகள முன் னேற்றம் சந்தேஷத்தை உண்டாக்கும். நேர்மை தொழில் வழி முயற்சிக்கு மூன்றாவது மனிதர்கள் உறவினர்களும் பாராட்டாமல் இருக்க மாட்டார்கள். தொழில் வழி தனம் கொடுக்கல் வாங்கல் திருப்தியான அம்சத்தில் தான் இருக்கின்றன. குடும்பத்தில் காலம் கடந்த பிரச்சினைகளையும் நடைமுறைக்குக் கொண்டு வருவது உங்கள் சிறபபுத் தன்மையை வெளிப்படுத்தும். நண்பர் அல்லது உறவினர் இல்லங்களில் குடும்பத்துடன் சேர்ந்து விருந்துண்பதும் உண்டாகும்.

தொழில் ஸ்தாபன வழியில் பாராட்டு உண்டாகும். பணவரவு பழைய கடன் தீர்க்க உதவியாக இருக்கும். பண்புக்காக உயர் மட்ட ரீதியில் பரிசுக்குரியவராக ஆகுவீர்கள். சிலர் பலம் மிக்க இலாகாவை பெறுவது போன்ற உயர்வுகள் கூட இருக்கும். கணவன் மனைவி உறவு ஒரே சீராகவே இருக்கும். குழந்தைகள் ஆரோக்கி வகைக்கு செலவிடுவது சற்று அதிகமாக இருக்கிறது. மாணவ மாணவிகளுக்கு கல்வி உயர்வு சாதாரணமாக இருக்கிறது. கலைப் பிரிவு ஆண், பெண்களுக்கு கடந்த காலத்தை விட ஒருபடி உயர்வு இருக்கிறது. மறைத்து வைக்கப்பட்ட காரியங்கள் சில உங்களுக்கு சாதகமாக இருக்கிறது. குடும்ப வகைக்கும். மருத்துவச் செலவு தவிர்க்க முடியாது. தனநிலையில் தட்டுப்பாடு இல்லா விட்டாலும். முக்கிய செலவுகள் நிலையில் தான் அதிகமாகும். தாய் வழியில் நடக்கும். விசேடங்க்ளுக்கு பிரயாண முக்கியத்துவம் உண்டாகும்.

**அதிஷ்ட எண்கள்: 5, 3, 1**

**அனுகூல திக்குகள்: தெற்கு, மேற்கு**

**11.11.2004 முதல் 26.12.2004 வரை**

அரசாங்க மனிதர்களின் சந்திப்பு நல்ல பேச்சு சூழ்நிலையை உருவாக்கும். மூலம் ஆதாயத்தைப் பெறலாம்.

பிரயாண சுகம் குறைவுதான். நீங்கள இப்போது கடன் பட்டாவது கௌரவச் செலவு செய்யக் கூடியவர்கள் கணவன் மனைவி உறவு பூசல்உடையது தான். காத்திருந்த காரியங்கள் சில கடைசி நேரத்தில் தடைப்பட்டு போவது குறிப்பிடத்தக்கது. பின் தொடர்ந்து நன்மைகளும் விடாது. கொடுக்கல், வாங் கல் புதிய திருப்ப த்தை உண்டாக்கும். குரு அதைரியத்தைத் தான் உண்டாக்குமே தவிர பாதிப்பு கொடுக்க இப்போது காலமில்லை. வீடு பூமிப் பொருள் போன்ற பொருட்களை விற்பதால் தன ஆதாயம் உண்டாகும். லாபத்தை ஒரு வழியில் குறைத்துக் கொண்டே இருப்பது என்பகால் அகனை கவனிக்கவும். கண்க்கூர் பார்க்கும். போது குறைவுகள் தெரியும். உத்தியோகம் மேலிடத்துக் கடித அனுகூலமும் உண்டு. குடும்பத்தில் புதிய ஆடை அணிகலன்கள் சேர்க்கையும் உண்டாகும். புத்திரர்கள் கல்வி இனி நன்றாக இருக்கும். அவசர பிரச்சினைகள் எல் லாம் பிற்பகுதியில் தொடர்ந்து முடிந்து விடும். கடந்த புத்திரர்கள் கல்வி இனி நன்றாக இருக்கும். அவசர பிரச்சினைகள் எல்லாம் பிற்பகுதியில் தொடர்ந்து முடிந்து விடும். கட்ந்த காலம் இருந்த பிரச்சினைகள் அடியோடு மறைந்து தன்னம் பிக்கை யின் எல்லைக்கு இப்போது வந்துவிடுவீகள்.

**அதிஷ்ட எண்கள்: 2, 7, 8**

**அனுகூல திக்குகள்: வடக்கு**

**26.12.2004 முதல் 11.02.2005 வரை**

குடும்பத்து தேவைகள் குறித்தபடி சரிகட்டப்படும். கணவக், மனைவி உறவில் இருந்து வந்த இடைவெளி கருத்து வேறுபாடும் விலகிவிட்டன. எப்படியும் இப்போது கௌரவச் செலவுகள் அதிகமாக இருக்கும். அடுத்தவர் வீட்டு சுப நிகழ்ச்சிகளில் கலந்து கொண்டு விருந்துண்பதும் இருக்கும். பிரயாணம் எதிர்பார்த்தபடி இடம் பெறுவது அல்லாமல், பெருமை தரும் நண்பர்களை சேர்த்து வைக்கும். இப்போது சேர்க்கையும் உண்டாகும். சுக்கிரன் வலிமை சிலருக்கு பெண்கள் மூலமாக ஆதாயம உண்டாகும். அயல்நாட்டு கடிதத்தொடர்பு போன்றவை யும் இருக்கும். உங்கள் வாகனத்தை புதுபபிக்க வேண்டிய அவசியம் உண்டாகும்.கலைத்துறை தொழில் உள் ளவர்கள் இப்போது ஒரே நிதானமாக செயல்படுவது மற்றவர்களால பாராட்டை உண்டாக்கும். வழக்கு பிரச்சினைகள் உங்களை தள்ளியே நிற்கின்றன. சகோதர சகோதரி வகையில் உயர்வு பெறுவதும் இருக்கும். புத்திரர், புத்தி ரியர்கள் உயர் கல்வியைப் பெறுவது, சிலர் உத்தியோகப் பதவியைப் பெறுதலும் இருக்கும். வழக்கு மூலம் ஆதாயம் பெறத் தக்கவர் நீங்கள்.

**அதிஷ்ட எண்கள்: 7, 3, 4**

**அனுகூல திக்குகள்: தெற்கு, மேற்கு**

**11.02.2005முதல் 24.03.2005**

எப்போதோ செய்த பாதிப்புகள் இப்போது தலைவலியை உண்டாக்கலாம். இதனால் மற்றவர்கள் தலையீடு உங்களுக்கு அவசியம் இருக்கும். இப்போது உறவினர் வகையில் மிகவும் நெருங்கய சூழ்நிலை இருந்து வருகிறது. பழைய கணக்குகளை சரி பார்த்து விட கூட்டு மனிதர்கள் ஒன்று பட்டு வரமாட்டார்கள்.இதனால்பழைய கணக்குகளை சரிபார்த்துவிட கூட்டு மனிதர்கள் ஒன்றுபட்டு வரமாட்டார்கள் இதனால் பழைய விஷயங்கள் அப்படியே இருக்கின்றன.தூரத்து கடிதம் நின்றிருந்த காரியங்களை துரிதமாக்கும் குடும்ப சொத்து வகை பிரச்சினைகள் நீங்கள் குறித்தபடி முடிக்க முடியாது குருவின் சஞ்சாரம் எதையும் மனம் விட்டு பேசமுடியாமல் இருக்கும். மறைந்திருந்த விஷயங்கள் சில- இப்போது வெளியாகும். சத்ருக்கள தான் பலமுள்ள காலம் என்பதால் வழக்கு வகையில் நிதானமாகப் போவது சிறப்பு.

(தொடரும்)

# நல்லூரான் திருவடிக்கு



## பதினைந்தாம் திருவிழா

## விழாக் கோலம் காணாத கண்ணென்ன கண்ணே!

(சிந்து)

வெள்ளி மயில் மீதினிலே வேலவனார் பவனி வர
வள்ளி தெய்வ யானையுமே மருங்கினிலே இவர்ந்து வர
கொள்ளை யெழில் வீசும்வீதி தன்னிலே அடியார் வர
மத்தளம் வீணை தாளம் முழங்கிடவே பஜனை செய்ய
எத்திசையும் மின்னொளிதான் அழகுடனே வீசிநிற்க
வீதியெங்கும் பக்தர்குழாம் பரவசமாய் வணங்கி நிற்க
விழாக்கோலம் காணாத கண்ணென்ன கண்ணே.
உச்சியிலே கூப்பாத கையென்ன கையே

கவிமணி
கந்தமுருகேச தாசனார்

## "வீதிவலம் வருவானடி"

அடியார்கள் அவை மோதி
அருளாளன் புகழ்பாடி
m !u

இடிபோலும் பேரிகைகள்
இன்னிசை நாதங்கள்
எங்கும் ஒலித்திடவே!

வடிவுமலர் மாலைகள்
வர்ண மின் குமிழ்கள்
மின்னி மிளிர்ந்திடவே!

விடியலைத் தேடிடும்
தமிழர்கள் வாழ்விலே
வளமான வாழ்வுதரவே!

முடிமன்னர் ஆண்ட
நல்லூர் முருகன்
வீதிவலம் வருவானடி!

அரியாலையூர்
சி.சிவதாசன்

## குறைகள் தமை நீக்கிடுவாய்!

நாவினிக்கப் பாடுவதற்கு முருகா!
நற்பதத்தை நல்கிடுவாய் முருகா!
மேவிநிற்கும் உன்னருளால் முருகா!
மேதினியை ஆளவைப்பாய் முருகா!
தாவிவரும் துயரமெலாம் முருகா!
தாங்கியெமைக் காத்திடுவாய் முருகா!
கூவிவரும் உன்னடியார் முருகா!
குறைகள்தமை நீக்கிடுவாய் முருகா!

தென் நல்லை
கு.பகீரதன்.

## முருகா வருக

முருகா என்றால் மனம் உருகும்
மூர்க்கம் எல்லாம் களைந்தோடும்

தேசம் எல்லாம் எம் துயரம்
தோய்ந்தே வந்தோம் மனப்பாரம்
தேயா அருளை கொண்டவனே
தாயாய் அருளைப் பொழிந்திடுவாய்

செல்வன்:
யோ.ராஜ்குமார்.

# செய்தித் துளிகள்

## அழகெழல்-2004 பரிசளிப்புவிழாவும் கண்காட்சியும்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரியின் நுண்கலை மன்றம் நடாத்தும் அழகெழல்-2004 பரிசளிப்பு விழாவும் கண்காட்சியும் இன்று சனிக்கிழமை கல்லூரியின் புதிய மண்டபத்தில் முகிழ் நிலை ஆசிரியர் சி.சிவானந்தராசா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில்,பிரதம விருந்தினராக வடக்கு-கிழக்கு மாகாணக் கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை அமைசசின் செயலர் சு.தியாகலிங்கம் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக இலங்கை வங்கியின் வடபிராந்தியக் கிளை உதவிப் பொது முகாமையாளர் க. பாலசுப்பிரமணியம், நாடக அரங்கக் கல்லூரி தலைவர் கலாநிதி குழந்தை ம. சண்முகலிங்கம் ஆகியோா் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் ஆசியுரையினை யாழ். தேசியக் கல்வியியற் கல்லூரியின் பீடாதிபதி கலாநிதி தி. கமலநாதனும் வாழ்த்துரையினை கலாநிதி குழந்தை ம.சண்முகலிங்கமும் நிகழ்த்தவுள்ளனர். (ந-க)

## பாடசாலை சீருடைத்துணி நவம்பரிலவிநியோகம்

(கொழும்பு)

2005 ஆம் ஆண்டுக்கான பாடசாலை மாணவருக்கான சீருடைத்துணி விநியோகம் எதிர்வரும் நவம்பர் மாதம் ஆரம்பிக்கபபடும் என கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

அதற்கான நடவடிக்கைகளை கல்வி அமைச்சு துரிதமாக மேற்கொண்டுவருகின்றது. (ந-க,61)

## அபராதம் விதிப்பு

(யாழ்ப்பாணம்)

கடல் ஆமையைப் பிடித்து வான் ஒன்றில் எடுத்துச சென்ற நால்வர் யாழ். பண்ணைச் சந்தியில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டு கடந்த 27ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்றில் நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா முன்னிலையில் ஆஜர் செய்யப்பட்டனர்.

வழக்கை விசாரித்த நீதிவான் பாதுகாக்கப்பட வேண்டிய கடல் ஆமையை எடுத்துச் சென்ற நால்வருக்கும் தலா ஆயிரம் ரூபா தண்டப் பணமாகவும் தலா ஆயிரம் ரூபா தண்டப் பணமாகவும் செலுத்துமாறு உத்தர விட்டார். (ந-5,19)

## இடைக்கால நிர்வாகத்தை எதிர்த்து சுவரொட்டிகள்

(அம்பாறை)

தமிழீழ விடுதலைப் புலிகளின் இடைக்கால நிர்வாக சபை குறித்த யோசனைக்கு எதிராக அம்பாறை மாவட்டத்தில உள்ள கல்முனை,சமமாந்துறை ஆகிய பிரதேசங்களில் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன.

'கிழக்கின் உதயம்' எனத் தங்களை அடையாளப் படுத்தியுள்ளவர்களே இந்தச் சுவரொட்டிகளை ஒட்டியதாகக் கூறப்படுகின்றது. (ந-க)

## செயலமர்வு

(இணுவில்)

வலிகாமம் கல்வி வலயத்திற்குட்பட்ட பாடசாலைகளில தரம் 10,11 ற்கு விஞ்ஞானமும் தொழினுட்பவியலும் கறபிக்கும் ஆசிரியர்களுக்கான செயலமர்வு இன்று சனிக்கிழமை காலை 8.30-4-30 வரை இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ளது. (ந-க,122)

## மீனவர் நலன்களுக்கென புதிய காப்புறுதித் திட்டம்

(கொழும்பு)

மனவ சமூகத்தைச் சேர்ந்தோரும் மீன்பிடித் துறைசார் முதலடுகளை மேற்கொளவோரும பயனடையும் விதத்தில் புதிய காப்புறுதித்திட்டம் ஒன்று அறிமுகப்படுத்தப்படவுள்ளது.

இதனூடாக ஒரு இலட்சம் குடுமபங்கள் நன்மையடையும் எனக கடற்றொழில் அமைச்சர் சந்திர சேன விஜயசிங்க தெரிவிததுளளார்.இந்தத் திட்டத்தில் கடன் வசதிகளும் அடங்குகின்றன. (ந-யே)

## பாடசாலை அதிபர்களின் கவனத்துக்கு

(இணுவில்)

2005 ஆம் ஆண்டுக்கான இலவசபபாட நூலுக்கான விண்ணப்பங்களை இம் மாதம் 7 ஆம் திகதக்கு முன்பு தமக்குத் தேவையான நூல்களை பட்டியலிட்டு, உடுவில் கோட்டக் கல்விப் பணிமனைக்கு அனுப்பி வைக்குமாறு சகல பாடசாலை அதிபர்களையும் கோட்டக் கல்விப் பணிப்பாளர் செ.குபேரநாதன் கேட்டுள்ளார். (ந-க,122)

## கருத்தரங்கு

(இணுவில்)

வலிகாமம் வலயக் கல்வி அலுவலகத்தில் கடந்த மாதம் நடைபெற்ற ஜேர்மன் தொழில்நுட்ப நிறுவனத்தின் நிலைய ஆய்வுச் செயலமர்வில் பங்கு பற்றாத அனைத்து ஆசிரியர்களையும் நாளையும் 11,12,18, ஆம் திகதிகளிலும் இராமநாதன் கல்லூரியில் நடைபெறவுள்ள கருத்தரங்கில் கலந்து கொள்ளுமாறு வலயக்கல்விப் பணிப்பாளர் திருமதி றெ. இருதயநாதன் கேட்டுள்ளார்.

இக் கருத்தரங்குகள் காலை 8.30 மணிமுதல் மாலை 4.30 மணிவரை நடைபெறும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ந-க-122)

## சிவதொண்டன் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் சிவதொண்டன் நிலையத்தினரால் மாதாந்தம் வெளியிடப்பட்டு வரும் சிவதொண்டன் ஆவணி மாத இதழ் வெளிவந்துள்ளது. (ந-க)

## சங்கம நிகழ்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சிக் கோட்ட மகளிர் அமைப்புக்களின் சங்கம நிகழ்வு கடந்த செவ்வாய்க் கிழமை கொடிகாமம் வலய இணைப்பாளர் ஜெயறூபி தலைமையில் சாவகச்சேரி இந்துக் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது. (ந-க, 29)

## தபாலகங்களுக்கு தொ.பே.இணைப்பு

(பொன்னாலை)

யாழ்- மாவட்டத்திலுள்ள சில தபாலகங்களுக்கு தொலைபேசி இணைப்பு வசதிகள் செய்து கொடுக்கப்படவுள்ளதாக மாவட்டத் தபால் அத்தியட்சகர் தெரிவித்திருக்கின்றார்.

இதற்கான இணைப்புக்கள் வழங்குவதற்கான ஆரம்பகட்ட வேலைகள் யாவும் பூர்த்தியடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைய இதுவரை தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படாத சுழிபுரம், பண்டத்தரிப்பு, அளவெட்டி, ஊர்காவற்றுறை, கைதடி மற்றும் கொடிகாமம் ஆகிய தபாலகங்களுக்கே இவ்வாறு தொலைபேசி இணைப்புக்கள் வழங்கப்படவுள்ளன. (ந-49)

## புதிய கட்டடம்

(உரும்பிராய்)

வலி-கிழக்கு பிரதேச சபைக்கான புதிய கட்டடத் தொகுதி ஒன்று புத்தூர் பகுதியில் நிர்மாணிக்கப்பட்டு வருகிறது.

வலி-கிழக்கு பிரதேச சபை தற்போது நீர்வேலியில் தற்காலிகமாக இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது. (ந-69)

## கூட்டம்

(யாழ்ப்பாணம்)

யாழ். மாவட்ட வலைப்பந்தாட்டச் சங்கத்தின் கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை 4.30 மணிக்கு துரையப்பா விளையாட்டரங்கில் நடைபெறவுள்ளது.

இக் கூட்டத்திற்கு யாழ். மாவட்ட வலைப்பந்தாட்ட சங்கத்தில் பதிவுகளை மேற்கொண்டுள்ள கழகங்களின் தலைவர், செயலாளர் ஆகியோரை தவறாது கலந்துகொள்ளும் படி கேட்கப்பட்டுள்ளது. (ந-க-19)

## வீதி சேதம்

(உரும்பிராய்)

உரம்பிராய்-கோப்பாய் பிரதான வீதி நீண்டகாலமாக திருத்தப்படாமல் மிக மோசமான நிலையில் இருந்து வருகின்றது.

இதனைத் திருத்துவதற்கான கற்கள், மண் போன்றன நெடு நாட்களாகப் பறிக்கப்பட்டுள்ள நிலையிலும் இவ்வீதி இன்னமும் திருத்தப்படாதுள்ளதுடன், இவை போக்குவரத்திற்கு மேலும் இடையூறாக இருந்து வருவதாகச் சுட்டிக்காட்டப்படுகிறது. (ந-69)

## பயிற்சிப்பட்டறை

(யாழ்ப்பாணம்)

சட்டத்திற்கும் சமூகத்திற்குமான நம்பிக்கை நிதியத்தின் ஏற்பாட்டில் நடாத்தப்பட்டுவரும் "பாலியல் குற்றச்சா செயல்கள் தொடர்பான நடைமுறை சாட்சிய சட்ட மருத்துவ விடய நிகழ்ச்சியின் 5வது பயிற்சிப்பட்டறையை யாழ்ப்பாணத்தில் நடத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது.

இச்செயலமர்வானது இன்றும் நாளையும் நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறவுள்ளது"

இப் பயிற்சிப்பட்டறையானது நீதிமன்றத்தின் முன் ஆஜராகும் பாலியல் குற்றச்செயல்கள் சம்பந்தமான வழக்குகளுக்கு வலுவூட்டுவதைக் குறிககோளாகக் கொண்டுள்ளது.

இதன்மூலம் நடைமுறைச் சாட்சிய காரணங்களின் பெயரில வழக்குகள் நிராகரிக்கப்படுவது குறைக்கப்படுமென எதிர்பார்க்கப்படுகிறது. (ந-19)

## சுகாதாரப் பரிசோதகர்கள் திடீர் சோதனை

(சுதுமலை)

மானிப்பாய் பிரதேச சபைக்குட்பட்ட ஆனைக்கோட்டை சுதுமலைப் பகுதிகளில் உள்ள வர்த்தக நிலையங்கள், உணவு விற்பனை நிலையங்கள் என்பனவற்றில் நேற்று முன்தினம் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் குழுவினரால் திடீர் பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன.

உணவு விற்பனை நிலையங்களில் காணப்பட்ட பல விதக் குறைகள் சுட்டிக்காட்டப்பட்டு, அவற்றை நிவர்த்தி செய்வதற்கு ஆலோசனை கூறப்பட்டது.

மேலும்,பல வர்த்தக நிலையங்களில் காலாவதித் திகதி முடிவடைந்த பிஸ்கட் மற்றும் நூடில்ஸ் வகைகள் விற்பனைக்கு வைக்கப்பட்டிருந்தமை கண்டுபிடிககப்பட்டு அவை கடையிலே வைத்து அழிக்கப்பட்டன. (ந-252)

# இணையத் தொடர்பு துண்டிப்பு புதிய பல தகவல்கள் கசிவு

(கொழும்பு)

கடந்த வாரம் இணையத் தொடா புகளில் ஏற்பட்ட இடையூறுகளின் பின்னணியில் சதிவேலை ஒன்று இடம்பெற்றிருப்பதாகத் தபால் தொலைத் தொடர்புகள் துறை அமைச்சர் டீ.எம் ஜெயரட்ண தெரிவித்துள்ளார்.

இநதச் சதிவேலையுடன் தொடா புடையவர்கள் குறித்து உடன டியாக கருத்துத் தெரிவிக்க முடி யாது என்று கூறியுள்ள அமைச்சர் மிகப்பெரிய சக்தி ஒன்றின் துணை யுடனேயே இந்தச் சதித்திட்டம் அமுல்படுத்தப்பட்டிருப்பது தெரிய வந்துள்ளது என்றும் குறிப்பிட்டார்.

கடலடி தொடு கம்பிகள் சேதப் படுத்தப்பட்டமையால் இணையத் தொடர்புகளில் பாதிப்பு ஏற்படுத் தப்பட்டது. இதன் காரணமாக 5 மில்லியன் அமெரிக்க டொலர் நட்டம் ஏற்பட்டதாக மதிப்பிடப்பட் டுள்ளது.முன்னதாக இந்திய நிறுவனம் ஒன்றுக்குச் சொந்தமான எம்.வி.நாலாந்து என்ற கப்பல் கடலடி தொடு கம்பிகள் உள்ள பகுதியில் நங்கூரமிட்டமையால் இந்த அனர்த்தம் ஏற்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டு அந்தக் கப்பல் தடுத்து வைக்கப்பட்டிருந்தது.

பின்னர் இடம்பெற்ற விசார ணைகளின் போது இந்தச் சம்ப வத்தில் குறிப்பிட்ட கப்பல் சம் பந்தப்பட்டிருக்கவில்லை என்பது உறுதிப்படுத்தப்பட்டு அந்தக் கப் பல் தனது பயணத்தைத் தொடர அனுமதிக்கப்பட்டது.

தற்போது இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை மேற் கொள்ள மூவர் கொண்ட விசேட குழு ஒன்று அமைக்கப்பட்டு விசார ணைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்டுள்ள வீசாரணை களின் முடிவில் கடலடி தொடு கம்பிகளை சேதப்படுத்திய சம்ப வத்துடன் தொடர்புடையவர்கள் இனம் காணப்படுவார்கள் என்றும் அமைச்சர் மேலும் தெரிவித் துள்ளார். (ற)




அண்மையில் இடம்பெற்ற பருத்தித்துறை மெதடிஸ்த பெண்கள் உயர்தரப் பாடசாலையின் பரிசளிப்பு விழா நிகழ்வில் விருந்தினராகக் கலந்துகொண்ட பாடசாலையின் பழைய மாணவர் சங்க கொழும்புக் கிளையின் பொருளாளர் திருமதி இ.பாஸ்கரன் மாணவி ஒருவருக்கு பரிசில் வழங்குவதைப் படத்தில் காணலாம். (படம் :- பரு .நிருபர்)



உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு வலி.கிழக்கு பிரதேச சபை உத்தியோகத்தர்களும் பணியாளர்களும் அச்சுவேலிப் பகுதியில் சிரமதானம் மேற்கொண்டபோது எடுக்கப்பட்ட படம்.

# தமிழீழ வைப்பகத்தின் ஊரகக்கிளை முல்லையில் திறந்துவைப்பு

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட மக் களின் பொருளாதார வளத்தை வலுவாக்கும் வகையில் தமிழீழ வைப்பகத்தின் ஊரகக்கிளை யொன்று அங்கு திறந்துவைக் கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு நகரில் அமைக் கப் பட்ட தமிழீழ வைப்பகத்தின் ஊரகக் கிளையின் பெயர்ப் பலகை யினை தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் நாடாளுமன்ற உறுப் பினர் ச.கனகரத்தினம் திரைநீக் கம் செய்து வைத்தார். புதிய வைப்பகக் கட்டடத் தொகுதி யினை மாலதி படையணி சிறப்புத் தளபதி கேணல் விதுசா நாடாவை வெட்டித் திறந்து வைத்தார். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளு மன்ற உறுப்பினர் ச.கனகரத்தினம் தனது கருத்துரையில்,

போரினால் வலுவிழந்த எமது மக்களின் பொருளாதாரத்தை தமிழீழ வைப்பகமானது கட்டி யெழுப்பி வருகின்றது. அதற்கு அமைவாகவே இவ்வாறான கட்ட மைப்புக்கள் உருவாக்கப்பட்டுள் ளன என்றார். (ற-121)

# யாழ்ப்பாணம் கல்வி வலய ஆங்கிலதினப் போட்டி முடிவுகள்

*(02/09/2004 இன் தொடர்ச்சி)* **தரம XIII**

1. கே.தர்சனன் - யாழ்.இந்துக்கல்லூரி
2. எஸ்.மயூரன் - யாழ்.இந்துக்கல்லூரி
3. பி.நொய்லின்ஜீவிதா - வேம்படி மகளிர் கல்லூரி

**குழுநிலைப் போட்டிகள் (குழுப்பாடல்) ஆரம்பப்பிரிவு**

1. சென்ஜோன்ஸ்கல்லூரி
2. யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை
3. புனித திரேசாள் மகளிர் கல்லூரி

**கனிஷ்ட பிரிவு (ஆண்கள்)**

1. சென்பற்றிக்ஸ் கல்லூரி

**கனிஷ்ட பிரிவு (பெண்கள்)**

1. சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
2. புனித திரேசாள் மகளிர் கல்லூரி

**சிரேஷ்ட பிரிவு (ஆண்கள்)**

1. சென்பற்றிக்ஸ் கல்லூரி

**சிரேஷ்ட பிரிவு (பெண்கள்)**

1. திருக்குடும்ப கன்னியர் மடம்
2. புனித திரேசாள் மகளிர் கல்லூரி

**நாடகம் - ஆரம்பப்பிரிவு**

1. யாழ்.இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலை
2. சென்பற்றிக்ஸ் கல்லூரி

**கனிஷ்ட பிரிவு**

1. வேம்படி மகளிர் கல்லூரி

**சிரேஷ்டபிரிவு (கவிதை நாடகம்)**

1. சென்பற்றிக்ஸ் கல்லூரி

**சிரேஷ்டபிரிவு - உரையாடல்**

1. சுண்டுக்குளி மகளிர் கல்லூரி
2. புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தா கல்லூரி



கும்கோணம் பள்ளியில் ஏற்பட்ட தீ விபத்துத் தொடர்பாக முதலமைச்சர் பொது நிவாரண நிதிக்கு நன்கொடையாக ரூ.10 இலட்சத்திற்கான காசோலையை, தேசிய காப்பீட்டுக் கழகத் தின் இயக்குநர் மற்றும் பொது மேலாளர் சோப்ரா, முதலமைச்சர் ஜெயலலிதாவிடம் கையளித்தார்.

# இந்தியச் செய்திகள்

# முன்னாள் அ.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர் பொலிஸ் பாதுகாப்பிலிருந்து தப்பியோட்டம்

போதைப்பொருள் கடத்தல் தொடர்பாகக் கைது செய்யப்பட்டி ருந்த அ.தி.மு.க பிரமுகரும் முன் னாள் சட்டமன்ற உறுப்பினருமான ரவிசங்கர் பொலிஸ் காவலிலிருந்து தப்பியோடிவிட்டார்.

விளாத்திக்குளம் தொகுதி முன் னாள் சட்டமன்ற உறுப்பினரான ரவிசங்கர் போதைப் பொருள் விவ காரம் தொடர்பாக கடந்த நவம்பர் மாதம் சென்னையில் கைது செய் யப்பட்டார்.

சென்னை மத்திய சிறையில் அடைக்கப்பட்டிருந்த அவரை மற் றொரு வழக்குக்காக நெல்லை நீதி மன்றத்துக்கு பொலிஸார் அழைத் துச் சென்று ஆஜர்ப் படுத்தினார்கள். அதன் பின்னர் அவர்கள் அனை வரும் நெல்லையில் ஹோட்டல் ஒன்றுக்குச் சென்று ஓய்வு எடுத்த தாகவும் உறவினர் ஒருவர் வீட்டுக் குச் செல்ல ரவிசங்கர் விரும்பிய தால் அவருடன் 2 பொலிஸார் மட்டும் சென்றதாகவும் கூறப்படு கிறது. அப்போது ரவிசங்கர் தப்பியோடிவிட்டார்.

அஜாக்கிரதையுடன் செயற் பட்டு அவரைத் தப்பவிட்ட குற்றத்துக்காக சென்னை ஆயுதப் படையைச் சேர்ந்த 4 பொலிஸார் கைது செய்யப்பட்டுள்ளனர். (து)

# சொத்துக் குவிப்பு வழக்கு ஆவணங்கள கர்நாடகத்துக்கு எடுத்துச் செல்ல நடவடிக்கை

தமிழக முதலமைச்சர் ஜெய லலிதா மீதான சொத்துக் குவிப்பு வழக்கு ஆவணங்கள் இன்னும் இரண்டொரு நாட்களில் பெங்களூர் கொண்டு செல்லப்படுமெனத் தெரிகிறது.

ஜெயலலிதா, அவரது தோழி சசிகலா உள்ளிட்டோருக்கு எதி ரான இந்த வழக்கை கர்நாடகத் துக்கு மாற்றி அது தொடர்பான ஆவணங்களை ஒரு வாரகாலத் துக்குள் கர்நாடக நீதிமன்றத் திடம் ஒப்படைக்க வேண்டுமென்று கடந்த 23 ஆம் திகதி தமிழக அரசுக்கு உத்தரவிட்ட உச்ச நீதி மன்றம், ஆவணங்களை உடனடி யாக பெங்களூருக்கு எடுத்துச் செல்ல வேண்டுமென்றும், மொழி பெயர்ப்புப் பணியைக் கர்நாடக அரசு மேற்கொள்ள வேண்டு மென்று அண்மையில் உத்தர விட்டது.

இதையடுத்து தமிழ், கன்னடம் ஆகிய இரு மொழிகளையுமறிந்த கர்நாடக நீதிமன்ற அலுவலர் பச் சைமுத்து சென்னை வந்துள்ளார்.

அவரது உதவியுடன் கர்நாடக நீதிபதிகள் குழு ஆவணங்களைச் சரிபார்க்கும் பணியில் ஈடுபட்டது, ஓரிருநாட்களில் இந்த ஆவணங் கள் உரிய பாதுகாப்புடன் பெங் களூருக்குக் கொண்டு செல்லப்படு மெனத் தெரிகிறது. (து)




அடுத்து 5 ஆண்டுகளுக்கு அமுலில் இருக்கும் புதிய வெளி வர்த்தகக் கொள்கையை மத்திய வர்த்தகத்துறை அமைச்சர் கமல்நாத் நேற்று முன்தினம் வெளியிட்டார்.

# முகமூடிக் கொள்ளையர் அட்டகாசம் பொலிஸ் தூங்கி வழிவதாக மக்கள் புகார்

முகமூடிக் கொள்ளையர்களால் 5,6 கிராம மக்கள் கடும் பயத் துக்கு உள்ளாகியுள்ளனர்.

ஆயுதங்களோடும் எண்ணெய் வழியும் உடலோடும் கிராமங் களுக்குள் நுழையும் அவர்கள் பெண்களை மானபங்கப்படுத்திய தகவலும் வெளியாகியுள்ளது.

கொள்ளையர்களைப் பிடிக்கக் கிராம மக்கள் இரவு நேர ரோந் தில் ஈடுபட்டுள்ளனர்.

கோவை மாநகரையொட்டி யுள்ள தேவடிப்பாளையம், கோடா ங்கிப்பட்டி, அரக்கம்பாளையம், திம்பிடிப் பாளையம், கொண்டம் பட்டி ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மக்கள் இரவில் தூங்கி இன்றோடு 20 நாட்களாகிவிட்டன.

ஆயுதங்களுடன் அதிரடியாக நுழைந்து அகப்பட்டதை அள்ளிச் செல்லும் முகமூடிக்கும்பல்தான் இதற்குக் காரணம். பொலிஸை நம் ாமல் கிராம மக்களே இரவில் ரோந்து செல்லும் காட்சிகள் இங்கு சர்வ சாதாரணம்.

எண்ணெய் வழியும் தேகம் முகத்தை மறைக்கும் துணி, கை களில் ஆயுதம். இது தான் இப் பயங்கரக் கும்பலின் அடையாளம். கொள்ளையடிப்பதோடு நில்லாமல் பெணகள் சிலரை இக்கும்பல் பாலி யல் பலாத்காரம் செய்துள்ளதாக வும் கிராம மக்கள் தெரிவிக்கின்றனர்.

கிராம மக்கள் ரோந்து சுற்றத் தொடங்கியவுடன் தோட்டங்களி லும் ஊருக்கு வெளியேயும் உள்ள தனி வீடுகளில் இக்கும்பல் குறி வைத்துக் கொள்ளையடிப்பதாகக் கிராமமக்கள் தெரிவிக்கின்றனர்.

இவ்வளவு நடந்தும் சம்பந்தப் பட்ட கிணற்றுக்கடவு காவல் நிலை யப் பொலிஸார் முகமூடிக் கொள் ளைபற்றி இற்றை வரை ஒரு வழக் கைக் கூடப் பதிவு செய்ய விலலை யென்பது தான் வேடிக்கை. (து)

# ரஷ்யாவில் தடுத்து வைக்கப்பட்டிருந்த பணயக்கைதிகளில் 32 பேர் விடுவிப்பு

(மொஸ்கோ)

**ரஷ்யாவின் வெஸ்லான் நகரிலுள்ள பாடசாலை ஒன்றில் 350க்கும் அதிகமான மாணவர்களையும் ஆசிரியர்களையும் பெற்றோரையும் பணயக்கைதிகளாக பிடித்துவைத்துள்ள ஆயுதபாணிகள்,- அவர்களில் 32 பேரை நேற்று முன்தினம் விடுதலை செய்துள்ளனர்.**

கடந்த மூன்று தினங்களுக்கு முன்பு சம்பந்தப்பட்ட பாடசாலையினுள் திடீரென புகுந்த ஆயுததாரிகள் அங்கு பாதுகாப்புக் கடமையில் ஈடுபட்டிருந்த 7 பேரைச சுட்டுக்கொன்று விட்டு பாடசாலையினுள் இருந்த 350 பேரை பணயக் கைதிகளாக தடுத்து வைத்துள்ளனர்.

இதனையடுத்து ஏற்பட்ட பதற்றததையும், பாதுகாப்பு அச்சுறுத்தல்களையும் தடுக்கும் முகமாக ரஷ்யாவின் உயர் மட்ட அதிகாரிகள் ஆயுததாரிகளுடன் மேற்கொண்ட சமரச முயற்சிகளைத் தொடர்ந்தே, இந்த 32 பேரும் விடுவிக்கப்பட்டிருந்தாலும் ஆயுததாரிகள் தமது பாதுகாப்பையும் பணயக்கைதிகள் மீதான அச்சுறுத்தல்களையும் தீவிரப்படுத்தியுள்ளனர். இதனால் பாடசாலைக்குள் உணவுப் பொருட்களையும் குடிநீரையும் எடுத்துச் செல்வதற்கு அனுமதிக்கும் படி செஞ்சிலுவைச் சங்கம் விடுத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டுள்ளது.


இருந்த போதிலும் பாடசாலையில் பொருத்தப்பட்டுள்ள குழாய் நீரையும் அயலிலுள்ள மக்கள் இரகசியமாக அனுப்பும் உணவு வகைகளையும் பணயக் கைதிகள் தங்களுக்குள் பகிர்ந்து கொள்வதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது இவ்வாறிருக்க நேற்றுக காலை 2 குண்டு வெடிப்புக்கள் பாடசாலை வளவிற்குள் நிகழ்ந்துள்ளன. இதற்கான காரணம் எதுவும் இதுவரை வெளியிடப்படவில்லை.

இதனையடுத்து, பொலிஸார் மேலும் உசாரடைந்துள்ளனர். அத்துடன், சம்பவ இடத்தைச் சுற்றிவளைத்து பாதுகாப்பை பலப்படுத்தியுள்ளனர்.

ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் கருத்துத் தெரிவிக்கையில், பயணக் கைதிகளைக காப்பாற்றுவது தங்களது பிரதான கடமையாகும் என்றும் இந்த கிளர்ச்சி நடவடிக்கைகளுககு பின்னணியில் செச்னியக கிளர்ச்சிவாதிகளே உள்ளனர் என்றும் தெரிவித்துள்ளதுடன் அங்கு தங்கியுள்ள மாணவர்களையும் ஆசிரியர்களையும், பெற்றோர்களையும் விடு விப்பதற்கு சகலவித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும் என்று தெரிவித்தார்.

எஞ்சியுள்ள 300க்கும் அதிகமான பயணக் கைதிகள் விடுவிக்கப்பட வேண்டுமானால் யூன் மாதத்தில் அயலிலுள்ள இங்கு சேஷியாவில் கைது செய்யப்பட்ட சகல கிளாச்சிவாதப் போராளிகளும் விடுதலை செய்யப்பட வேண்டும் என கோரியுள்ளனர். (ப-யே)



ஸ்கொட்லாந்தில் உள்ள எடின்பர்க் உயிரியல் பு'ங்காவில் புதிதாகப் பிறந்துள்ள பர்மா வகையைச் சேர்ந்த மலைப் பாம்பின் குட்டி இது. தனது தந்தை மீது இக குட்டி உல்லாசமாகத் தவழ்ந்து விளையாடும் காட்சி.

## தென்கொரிய அதிபருக்கு எதிராக சியோல் நகரில் பெரும் ஆர்ப்பாட்டம்

(ஈராக்)

தென்கொரிய அதிபர் ரோமூஹு"னுக்கு எதிராக சியோல் நகரில் ஆர்ப்பாட்டம் ஒன்று இடம்பெற்றுள்ளது.



ஈராக்கில் அமெரிக்கப் படைகளுக்குத் துணையாக தென்கொரியா தனது படைகளை ஏற்கனவே அனுப்பி இருக்கிறது. தென்கொரியப் படைகளை அங்கிருந்து வாபஸ் பெறக்கோரி அந்த நாட்டை சேர்ந்த தொழில் அதிபர் ஒருவரை ஈராக் தீவிரவாதிகள் கடந்த சில மாதங்களுக்கு முன்பு கடத்திச் சென்று கொலை செய்தனர். ஆனாலும் தென்கொரியா தனது நிலையில் இருந்து மாறவில்லை.

ஈராக்குக்கு மேலும் படைகளை அனுப்ப தென்கொரிய அரசாங்கம் முடிவு செய்துள்ளது. அரசின் இந்த முடிவைக் கண்டித்தும் தென்கொரியாவில் இருந்து அமெரிக்கப் படைகளை வாபஸ் பெறவேண்டும் என்றும் வற்புறுத்தியுமே சியோல் நகரில் இளைஞர்கள் போராட்டம் நடத்தினார்கள். அதிபர் ரோமூஹு"னுக்கு எதிராகவும் அவர்கள் கோஷம் எழுப்பியுள்ளனர். இப் போராட்டத்தில் ஆயிரக்கணக்கானோர் ஈடுபட்டதாகத் தெரிய வருகிறது. (ற)

# வேட்பு மனுவைக் கையேற்பார் புஷ்

(வாஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் எதிர்வரும நவம்பர் மாதம் மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட உள்ள நிலையில் மிக முக்கியமான உரை ஒன்றை ஆற்றத் தயாராகியுள்ளார்.


குடியரசுக் கட்சியின் வருடாநத மாநாட்டின் உச்சக் கட்ட நிகழ்வுகளில் ஒன்றாக இந்த உரை அமையும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ புஷ் எதிர்வரும் நவம்பர் மாதம் நடைபெறவுள்ள தேர்தலில் குடியரசுக்கட்சியின் வேட்பாளராக மீண்டும் போட்டியிடுவதை உறுதி செய்யும் வேட்பு மனுவை குடியரசுக் கட்சியின் வருடாந்த மாநாட்டில் உத்தியோகபூர்வமாக பெற்றுக் கொள்ளவுள்ளார்.

இதனையடுத்து, அடுத்த 4 வருடத்துக்கான தனது தொலைநோக்குத் திட்டங்களை அவர் பட்டியலிட்டு உரையாற்றுவார்.

செப்ரெம்பர் 11 தாக்குதல் தொடர்பாக அமெரிக்க ஜனாதிபதியின் பிரசாரம் பெரும்பாலும் தங்கியிருக்கும் என எதிர்பார்க் கப்பட்ட போதும், அவர் புதிய உள்நாட்டுக் கொள்கைத் திட்டங்களை முன்வைப்பார் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

ஜனநாயகக் கட்சி வேட்பாளர் ஜோன் கெரிக்கும் ஜோர்ஜ் டபிள்யூ புஷ்ஷ"க்கும் இடையே



கடும் போட்டி நிலவுவதாக அபிப்பிராயக் கருத்துக் கணிப்புக்கள் தெரிவிக்கின்றன. (ப-யே)

## WORLD NEWS உலக தரிசனம்

## அமெரிக்காவில் சீக்கியர் கோவில்

(அமெரிக்கா)

அமெரிக்காவின் சான்ஜோஸ் நகரில் 40 ஏக்கர் பரப்பளவில் ரூ.45 கோடி நிதி செலவில் பிரம்மாண்டமான சீக்கியர் கோயில் ஒன்று கட்டப்பட்டு கடந்த ஞாயிற்றுக்கிழமை குடமுழுக்கு செய்யப்பட்டுள்ளது.

ஆயிரக்கணக்கான சீக்கியர்கள் வண்ண வண்ண உடை அணிந்து, குடும்பம் குடுமபமாக இதில் கலந்து கொண்டனர். நகரமே விழாக்கோலம் பூண்டிருந்தது. அமெரிக்காவா அமிர்தசரஸா என்று வியக்கும் அளவுக்கு சுமார் 7 ஆயிரத் துக்கும் மேற்பட்ட சீக்கியர்கள் அந் நகரில் குழுமி பக்திப் பாடல்களைப் பாடி வழிபட்டனர்.

1990- களில் தொடங்கப்பட்டது இப் பணி. மிகப்பெரிய குருத்வாரா கட்டப்பட்டால் இந்தப் பகுதியின் அமைதியே கெட்டு விடும் என்று அப்பகுதியில் குடியிருப்பவர்கள் ஆட்சேபித்தனர். அதனால் குருத்வாராவின் அளவு குறைக்கப்பட்டது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை 200 தொண்டர்கள் பொதுத் தொண்டு ஆற்ற முன்வந்தனர். எனவே நகருக்குள் வந்தவர்களால் மற்றவர்களுக்குத் தொல்லை எதுவும் வராமல் தவிர்க்கப்பட்டது.

இக் கோயிலுக்கு ஆண்டுக்கு 4.5கோடி ரூபா நன்கொடை திரளும் என்றும் இன்னும் 4 அல்லது 5 ஆண்டுகளில் கூடுதலாக 74 ஆயிரம் சதுர அடி பரப்பளவில் இந்த குருத்வாரா விரிவுபடுத்தப்படும் என்றும் ஆலய நிர்வாகிகள் தெரிவித்தனர்.

வழிபாட்டுக் கூடம், அருங் காமட்சியகம், பள்ளிக்கூடம, ஆகியவற்றையும் இங்கே நிறுவ ஆலய நிர்வாகிகள் திட்டமிட்டுள்ளனர். (ப-ற)

# ஊரடங்கை மீறியோர் மீது பொலிஸார் தாக்குதல்

## இருவர் பலி; மூவர் காயம்

(காத்மண்டு)

நேபாளத் தலைநகர் காத்மண்டுவில் பிறப்பிக்கப்பட்ட ஊரடங்கு உத்தரவை மிறி ஆர்ப்பாட்டம் செய்தவர்கள் மீது பொலிஸார் மேற்கொண்ட தாக்குதலில் இருவர் கொல்லப்பட்டதுடன், 3 பேர் காயமடைந்துள்ளனர்.

ஈராக்கில் 12 நேபாளப் பணயக் கைதிகள் கொல்லப்பட்டதால் கொதிப்படைந்த மக்கள் கூட்டத்தினர் நகரிலுள்ள ஒருமசூதி மற்றும் சில மத்திய கிழக்கு நாடுகளின் விமான நிலையங்களைத் தாக்கியதையடுத்து, ஆட்சியாளர்கள் காலவரையறையற்ற ஊரடங்கு உத்தரவை பிறப்பித்தனர் நேபாள அரசு விதித்திருந்த தடையை மீறி தொழில்லாளர்களை ஈராக்கிற்கு அனுப்பியதாகக் கூறப்படும் சில ஆட்சியமைப்பு நிறுவனங்களையும் அவர்கள் குறிவைத்தனர்.

நேபாளத்தில் இவர்களை நினைவுகூறும் வகையில் நேற்றுமுன்தினம் தேசிய துக்க தினம் அனுஷ்டிக்கப்பட்டது. (ப-யே)

## அமெரிக்கத் தூதரகம் மீண்டும் திறக்கப்பட்டது

(கோலாலம்பூர்)

''அந்திரெக்ஸ்'' சர்ச்சை காரணமாக மூடப்பட்ட மலேசியாவுககான அமெரிக்கத் தூதரகம் நேற்று முன்தினம் முதல் மீண்டும் திறக்கப்பட்டுள்ளது.

அந்திரெக்ஸ் துகள்கள் மலேசியாவிலுள்ள அமெரிக்கத் தூதரகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதாகக் கிடைத்த் தகவலை அடுத்து, கடந்த 3 வாரங்களுக்கு முன்பு அந்தத் தூதரகம் மூடப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனினும் கடந்த 3 வாரங்களாக மேற்கொள்ளப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளில் அவ்வாறு எதனையும் இனங்காண முடியவில்லை என்று அமெரிகக பாதுகாப்புப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (ப-யே)



**ரஷ்யாவில் உள்ள வெஸ்லான் நகரத்தில் உள்ள பள்ளியில் 300ற்கும் மேற்பட்ட குழந்தைகளை தீவிரவாதிகள் பிடித்து வைத்துள்ளனர். குழந் தைகளை மீட்பது தொடர்பாக தீவிரவாதிகளுடன் பேச்சுவார்த்தை நடந்து வருகிறது. குழந்தைகளின் விடுதலைக்காக உறவினர்களும், நண்பர்களும் அழுது புலம்பியவாறு கவலை தோய்ந்த முகங் களுடன் பள்ளி அருகே காத்து நிற்கின்றனர்.**

# குண்டுத்தாக்குதல் குறிதவறியது அகமது சலாபி உயிர்தப்பினார்

ஈராக்கின் முன்னாள் நிர்வாக கவுன்சில் உறுப்பினர் அகமது சலாபி சென்ற கார்மீது இனம் தெரியாத நபர்கள் துப்பாக்கி பிரயோகம் மேற்கொண்டதில் அவரது பாதுகாவலர்கள் இரண்டு பேர் படுகாயமடைந்தனர். சலாபி அதிர்ஷ்டவசமாக உயிர்தப்பினார்.

சதாம்ஹு"சைன் ஆட்சிக்கலாத்தில் வெளிநாட்டில் தலைமறைவாக இருந்தவர் எதிர்க்கட்சித் தலைவர் அகமது சலாபி. சதாம் ஆட்சி வீழ்ந்த பின் ஈராக்திரும்பினார். அமெரிக்காவின் இடைக்கால நிர் வாகக் குழுவில் இவர் உறுப்பினராக இருந்தார். ஈரானுக்கு உளவு சொன்னதாக சமீபத்தில் இவர் மீது புகார் கூறப்பட்டது. இது தொடர்பாக அவர் மீது வழக்கும் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந நிலையில், சலாபி நஜாப் நகருக்குச் சென்றுவிட்டு பாக்தாத்தின் தெற்குப் பகுதியில் உள்ள லத்தபயா நகருக்குள் நேற்றுமுன்தினம் வந்தபோது அவர் பின்னால் காரில் வந்த அடையாளம் தெரியாத நபர்கள சலாபியை நோக்கிச் சரமாரியாகச் சுட்டனர். இந்தச் சம்பவத்தில் சலாபியின் பாதுகாவலர்கள் இரண்டு பேர் படுகாயமடைந்தனர். ஒருவரது நிலை கவலைக்கிடமாக உள்ளது.

இதற்கிடையே, பாக்தாத்தில் இடைக்கால பாராளுமன்றம் அமைய உள்ள இடத்தில் நேற்றுமுன்தினம ஐந்து குண்டு வெடிப்புச் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன. இந்தப் பகுதியில் அமெரிக்க இராணுவமுகாம்களும் உள்ளன. தினசரி இப்பகுதியில் குண்டு வெடிப்புகள் நடப்பது வாடிக்கையாகி விட்டது. இராணுவ ஹெலி கொப்டர்கள் கண்காணிப்புப் பணியில் ஈடுபட்டுள்ளன. இக் குண்டு வெடிப்புச் சம்பவத்தில் பொது மகன் ஒருவர் படுகாயமடைந்தார். (ப-ற)

# நோத்வெஸ்ட் தொடரின் முதலாவது போட்டியில் 7 விக்கெற்றுக்களால் இங்கிலாந்து அணி வெற்றி

இங்கிலாந்து-இந்திய அணிகளுக்கிடையிலான நோத் வெஸ்ட் தொடரின் முதலாவது ஒருநாள் சர்வதேசப் போட்டி நேற்று முன்தினம்



டிரென்ட் பிரிஜில் நடைபெற்றது.

இம முதலாவது போட்டியில் இங்கிலாந்து அணி 7 விக்கெற்றுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி இந்திய அணியை முத லில் துடுப்பெடுத்தாடப் பணித்தது. அதன்படி முதலில துடுப்பெடுத்தாடிய இந்திய அணி 43.5 ஓவர்களில் சகல விக்கெற்றுக்களையும் இழந்து 170 ஓட்டங்களைப் பெற்றது.

துடுப்பாட்டத்தைப் பொறுத தவரை மத்திய வரிசைத் துடுப்பாட்ட வீரரான முஹமட் கைவ் அதிகபட்சமாக நின்று நிலைத்தாடி 50 ஓட்டங்களைப் பெற்றார். அத்துடன், சௌரவ் கங்குலி 24ஓட்டங்களையும் வி.வி.எஸ்லக்ஸமன் 29 ஓட்டங்களையும் கவாஸ்கர் 20ஓட்டங்களையும் பெற்றனர். உதிரிகளாக இந்திய அணிக்கு 14 ஓட்டங்கள் கிடைத்தன. மொத்தமாக இந்திய அணி 7 விக்கெற்றுக்களை இழந்து 170ஓட்டங்களைப் பெற்றது.



பநதுவீச்சில் ஸ்டீவ் ஹார் மீஸன் 41ஓட்டங்களுக்கு 3 விக்கெற்றுக்களையும், வோவ் 30 ஓட்டங்களுக்கு 3 விக்கெற்றுக்களையும் ஹொக்



பிளின்ரோவ் மற்றும் கைல்வ் ஆகியோர் தலா ஒவ்வொரு விக்கெற்றினையும் வீழ்த்தினர்.

171ஓட்டங்கள் பெற்றால் வெற்றி என்ற இலக்குடன் துடுப்பெடுத்தாடிய இந்திய அணி, 32 ஓவரில் 3 விக்கெற்றுக்களை இழந்து வெற்றி இலக்கினை அடைந்தது. துடுபாட்டத்தைப் பொறுத்தவரை மார்க்கஸ் ரெஸ்கோதிக் 33ஓட்டங்களுக்களையும், சோலங்கி 52ஓட்டங்களையும், ஸ்ரக்ஸ் ஆட்டமிழக்காமல் 41 ஓட்டங்களையும், பிளின்ரோவ் 34ஓட்டங்களையும் பெற்றனர்.

ஸ்ரக்ஸ மற்றும் பிளின்ரோவ ஆகியோர் தமக்கிடையே ஓட்டங்களைப் பகிர்ந்துகொண்டதோடு, ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்களான ரெஸ்கோதிக் மற்றும் சோலங்கி ஆகியோரும் 63 ஓட்டங்களை தமக்கிடையே பகிர்ந்து கொண்டனர்.



பந்து வீச்சில் பாலாஜி 2 வக்கெற்றுக்களையும் திக்பான் பதான் ஒரு விக்கெற்றினையும் வீழ்த்தினர்.

இரு அணிகளுக்கிடையலான இரண்டாவது போட்டி இன்று நடைபெறவுள்ளது.

(ற-121)

## விளையாட்டு நிகழ்வுகள்

(பொன்னாலை)

தென்மராட்சிக் கல்வி வலயத் திற்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான உதைபந்தாட்டம், கரப்பந்தாட்டம் மற்றும் தாச்சிப் போட்டிகள் இம் மாதம் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டிகளில் உதைபந்தாட்டம் 12,14,16,18 ஆகிய வயதுக்குட்பட்ட பிரிவுகளாகவும், கரப்பந்தாட்டம் பெண்களுக்கு 15,17, 19ஆகிய வயதுக்குட்பட்ட பிரிவுகளாகவும் நடைபெறவுள்ளன. அதேநேரம், தாச்சிப் போட்டி 11வயது ஆண், பெண் என இரு பிரிவுகளாக நடைபெறவுள்ளன.

(ற-49)

## கரபந்தாட்டத்திற்கு சிறந்த மைதானமில்லை

இலங்கையின் தேசிய விளையாட்டான கரபந்தாட்டத்தை அபிவிருத்தி செய்வதற்கு சிறநத விளையாட்டு மைதானம் இல்லையென குறைகூறப்படுகிறது.

இதுபற்றி சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு விடுத்த வேண்டுகோள் பயனற்றுப் போனதாக இலங்கை கரப்பந்தாட்டச் சங்கம் விசனம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ஆசிய வெற்றிகிண்ணத்திற்கான ஆண்களுக் கான கனிஸ்ட சுற்றுத்தொடரில் பங்கேற்க விருக்கும் கரப்பந்தாட்ட வீரர்கள் நேற்று டோகா, கட்டாருக்கு புறப்பட்டுள்ளனர்.

இந்தச் சுற்றுத் தொடரில் 19 நாடுகளைச் சேர்ந்த அணிகள் பங்கேற்கின்றன.

• பெண்களுக்கான ஆசியக் கனிஷ்ட கரபந்தாட்டப் போட்டியை இலஙகையில் நடத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

(ற-ஜே)

### வடக்கு-கிழக்கு மகாண

## தடகள விளையாட்டுப் போட்டியில் யாழ்ப்பாணத்திற்கு 2 ஆம் இடம்

(யாழ்ப்பாணம்)

வடக்கு-கிழக்கு மாகாண தடகள விளையாட்டுப் போட்டி வவுனியாவில் கடந்த 21,22 திகதிகளில் நகரசபை விளையாட்டுத் திடலில் நடைபெற்றது. இப் போட்டியில் மாவட்ட ரீதியில முதல் மூன்று இடங்களை திருகோணமலை, யாழ்ப்பாணம், அம்பாறை ஆகிய மாவட்டங்கள் பெற்றன.

அதன்படி யாழ்மாவட்டத்தில் முதலாம் இடத்தைப் பெற்று தேசிய மட்ட போட்டிக்குச் செல்லவுள்ள வீரர்களின் பெயர் விபரங்கள் வருமாறு,

தடை தாண்டல் எஸ்.ரஞ்சித்குமார், குண்டு எறிதல் எம்.பிரதீப்குமார, உயரம் பாய்தல்-எஸ்.கமலமோகன், தட்டு எறிதல் ஆர்.உதயகுமார் தடை தாண்டல் எஸ்.தயாழினி, ஓட்டப் போட்டி என்.சிறிவித்தியா. (ற-க,5)

## ஒலிவ் வளையத்துக்கான நியூஸிலாந்தின் தடைநீக்கம்

ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் வென்ற வீரர்கள் ஒலிவ் இலை வளையங்களைத் தங்களுடன் கொண்டுவர விதிக்கப்பட்ட தடையை நியூசிலாந்து அரசு நீக்கியுள்ளது.

எதென்ஸ் ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம்வென்ற நியூசிலாந்து வீர, வீராங்கனைகளுக்கு சமீபத்தில் ஒரு அதிர்ச்சிச் செய்தி வந்தது. ஒலிம்பிக் போட்டிகளில் பதக்கம் ஜெயிக்கும் போது கிட்டப்படும் கௌரவம் மிக்க ஒலிவ இலை வளையங்களை நாடு திரும்பும் போது தங்களுடன் எடுத்துவரக்கூடாது என நியூசிலாந்து அரசு திடீர் தடை விதித்திருந்தது.

ஒலிவ் இலைகள் மூலம் தொற்றுநோய்க்கிருமி அல்லது நுண்ணுயிரிகள் பரவும் வாய்ப்பு இருப்பதால், அவற்றை அனுமதிக்கக்கூடாது என்ற நியூசிலாந்து நாட்டு விவசாயத்துறை அமைச்சகத்தின் கோரிக்கையை அடுத்து அந்நாட்டு அரசு இதற்கு தடைவிதித்தது.

ஒலிவ் இலைகள் மூலம் நோய்க்கிருமிகள் பரவினால், விலங்குகள், தாவரங்களை அவை பாதித்து அழித்துவிடும். ஆகவே அவற்றை எதென்ஸிலேயே விட்டுவிட்டு வரவேண்டும் என்று அந்நாட்டு அரசு உத்தரவிட்டது. நியூஸிலாந்து அரசின் இந்தத் திடீர் முடிவால், அந்நாட்டுப்பதக்க வீரர்கள் பெரிதும் கவலையடைந்தனர். அரும்பாடுபட்டுப் பெற்ற ஒலிவ் இலைகளை எப்படி சும்மா விடமுடியும் தங்கள் அதிருப்தியை வீரர்கள் அரசுக்குத் தெரியப்படுத்தினர். (ற)



பிரிஸ்போன் லயன் அணிக்கு எதிரான இரண்டாவது ஏ.எப்.எல்.தகுதி காண் விளையாட்டுப் போட்டிக்கு தயாராகும் தனது அணியினரை உற்சாகப்படுத்துகிறார் செனற் கில்லி அணியைச் சேர்ந்த ஸ்ரீவன் மில்னி.

# விளையாட்டு செய்திகள்

## ஓபன் டென்னிஸ் போட்டி முதல்சுற்றில் ஹெனின் -நிக்கோலஸ் மாசு வெற்றி

யு.எஸ்.திறந்த டென்னிஸ் போட்டியில் எதென்ஸ் ஒலிம்பிக்கில் தங்கம் வென்ற தன்னம்பிக்கையில் களமிறங்கிய ஜஸ்டின் ஹெனின் நிக்கோலஸ் மாசு அபாரமாக ஆடி இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளனர்.



முன்னணி வீரரான மாரட் சபன் முதல் சுற்றிலே வெளி யேறினார். ஷரபோவா அபாரம் கிராண்ட்ஸ்லாம் அந்தஸ்து பெற்ற யு.எஸ்.ஓபன் டென் னிஸ் போட்டி நியூயோர்க் நகரில் நடக்கிறது. கடந்த செவ்வாய்க்கிழமை நடந்த பெண்கள் ஒற்றையர் பிரிவில் நடப்புச் சம்பியனான பெல்ஜியத்தின் ஜஸ்டின் ஹெனின் எளிதான வெற்றி பெற்றார். இவர், செக்குடியரசின் நிக்கோல் வைடிசோவாவை 6:1,6:4என்ற நேர்செட்களில் வீழ்த்தினார்.



மற்றொரு போட்டியில் விம்பிள்டன் சம்பியனான ரஷ்யாவின் மரியா ஷரபோவா 6:3,5:7,7:5 என்ற செட்களில் அமெரிக்காவின் லரா கிரன்வெல்லியை வென்றார். அமெரிக்காவின் செரீனா வில்லியம்ஸ் 6:1, 6:3 என்ற நேர்செட்களில் செக்குடியர்சின் சான்ட்ரா கிளினோவாவை வென்றார். இவரது சகோதரி வீனஸ் வில்லியம்ஸ் 6:3,7:6, (7/3) என்ற செட்களில் ஹங்கேரியின் பீட்ரா மண்டுலாவை வென்று அடுத்த சுற்றுக்கு முன்னேறினார்.

இதேபோல், அமெரிக்காவின் கேப்ரியாட்டி செக்குடியரசின் டெனிசா சலாட்கோவாவை 2:6,6:1,6:2 என்ற செட்களிலும், அமெரிக்காவின் டேவன் போர்ட் 6:4,6:0என்றசெட்களில் சிலோவாகியாவின் லுபோமிரா குரஷ் கோவாவையும், ரஷ்யாவின் அனஸ்டாசியா மிஸ்கினா 6:1,6:0என்ற செட்களில் லுட்மிலா செர்வனோவாவையும், பிரான்சின் மேரி பயர்ஸ் 6:1,6:2 என்ற செட்களில் சக நாட்டு வீராங்கனையான எமிலி லோயிட்டையும் வென்று இரண்டாவது சுற்றுக்குத் தகுதி பெற்றனர்.

ஆண்கள் ஒற்றையர் முதல் சுற்றில், சிலியின் நிக்கோலஸ் மாசு 6:4,6:0,6:2 என்ற நேர் செட்களில் அர்ஜென்டினாவின் ஜோஸ் அகரிசோவை வென்றார். மற்றொரு போட்டியில் ரஷ்யாவின் மாரட்சபன் 6:7, 4:6,6:3,3:6 என்ற செட்களில் சுவீடனின் தாமஸ் என்குவிஸ்டிடம் அதிர்ச்சித் தோல்வி அடைந்தார். கடந்த இரண்டு மாதங்களுக்கு முன் நடந்த விம்பிள்டன் போட்டியிலும் இவர் முதல் சுற்றில் வெளியேறியமை குறிப்பிடத்தக்கது.

உலகின் இரண்டாம் நிலை வீரரான அமெரிக்காவின் ஆன்டி ரோடிக் 6:0,6:2,6:2 என்ற செட்களில் சக நாட்டு வீரரான ஸ்கோவெல்லி ஜென்கின்சையும், பிரிட்டனின் டிம்ஹென்மேன் 7:6,(7/2), 6:7(7/9),4:6, 6:4,6:4,என்ற செட்களில் குரோஷியாவின் இவோ கர்லோவிக்கையும், தாய்லாந்தின் பாரடோன் ஸ்ரீசாபன் 4:6,6:4,6:1,6:1 என்ற செட்கணக்கில் ரொமேனியாவின் விக்டர் ஹெனெஸ்குவையும் வீழ்த்தி இரண்டாவது சுற்றுக்கு முன்னேறினார். (ற)

## இன்று ஒரு தகவல்

# மௌனத்தின் மகிமை

இரண்டு பெரிய ஞானிகள் சந்தித்தால் அவர்கள் என்ன பேசிக் கொள்வார்கள்? அதைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால் நீங்கள் இந்தக் கதையைக் கேட்க வேண்டும்.

ஷேக்பரீத் ஒரு பெரிய ஞானி. அவர் ஒவ்வொரு ஊராகப் பயணம் செய்து கொண்டிருந்தார். அப்போது ஒரு முறை அவர் காசிக்கு வந்து சேர்ந்தார். அவரோடு அவரது சீடர்கள். சிலரும் வந்து கொண்டிருந்தார்கள். காசியில் கபீர் தங்கியிருக்கின்ற விஷயம் அந்த சீடர்களின் காதில் விழுந்தத. உடனே அவர்களுக்கு ஒரு ஆசை.ஷேக் பரித் கபீரைச் சந்தித்துப் பேசவேண்டுமேன்று அவர்கள் ஆசைப்பட்டனர்.

ஏன் அப்படி ஆசைப்பட்டார்கள் என்றால் இரண்டு ஞானிகளைச் சந்திக்க வைத்தால் பல அரிய தத்துவங்களைக் கேட்பதற்கு ஒரு வாய்ப்பு கிடைக்குமே என்று நினைத்தார்கள். அதனால் தான் சீடர்கள் தமது விருப்பத்தை அவரிடம் கூறினார்கள். ‘சரி... கபீரைச் சந்திக்கலாம் ஆனால் அவருடன் பேசுவதைப் பற்றி நான் எதையும் சொல்வதற்கில்லை’ என்றார். ‘ஏன் கபீருடன் நீங்கள் எதுவும் பேசமாட்டீர்களா?’ என்று கேட்டனர் சீடர்கள்.

அவரோடு பேசுவதற்கு எதுவும் இல்லை.ஏனென்றால் எனக்கு என்னதெரியுமென்பது அவருக்குத் தெரியும். அவருக்கு என்ன தெரியுமென்பது எனக் குத் தெரியும்.அப்படி இருக்கும்போது நாங்கள் இரண்டு பேரும் பேசிக்கொள்வதற்கு என்ன விஷயம் இருக்கப்போகிறது?’ என்றார் அவர். இங்கே நிலைமை இப்படி.

கபீர் இருக்கின்ற இடத்தில் எப்படித் தெரியு மா? பரீத் காசிக்கு வந்திருக்கிறார் என்ற விடயம் கபீரின் சீடர்களுக்குத் தெரிந்தது. உடனே அவர்களும் ‘நீங்கள் ஷேக் பரீத்தைச் சந்தித்துப் பேசவேண்டும்’ என்று கேட்டார்கள். அதற்குக் கபீர் சொன்னார் ‘நாங்கள் இரண்டுபேரும் சந்தித்துக் கொண்டால் ஒருவரையொருவர் கட்டித் தழுவிக்கொள்வோம். ஆனந்தக் கண்ணீர் வடிப்போம். வார்த்தைகளால் பரிமாறிக் கொள்ள எங்களிடம் எதுவுமில்லை என்றார்.

இருந்தாலும் இரண்டு பக்கத்துச் சீடர்களும் அப்படி நினைக்கவில்லை. எப்படியும் இவர்கள் சந்தித்துக்கொண்டால் கொஞ்சமாவது பேசாமல் இருக்க முடியாது. ஏதாவது பேசிக்கொள்வார்கள் என்று நினைத்தார்கள். அதனால் தொடர்ந்து வற்புறுத்தினார்கள்.

கபீர் பரீத்தை தனது ஆசிரமத்திற்கு அழைத்தார். அந்த ஊரின் எல்லைக்கே போய் அவரை அழைத்துக்கொண்டு வந்தார். இரண்டுபேரும் சந்தித்தாகள். ஒருவரையொருவர் கட்டிப்பிடித்துக் கொண்டார்கள். ஒருவர் கையை மற்றவர் பிடித்தபடியே நீண்டநேரம் நின்றுகொண்டிருந்தார்கள். ஆனந்தக் கண்ணீர் வழிந்தது.

கபீரின் ஆசிரமத்தில் இரண்டுபேரும் மௌனமாக உட்கார்ந்தார்கள். ஏதாவது பேசுவார்கள் என்று எதிர்பார்த்த சீடர்கள் இருபுறமும் காத்துக் கொண்டிருக்கிறார்கள். பேசுங்கள் என்று சொல்லியும் பார்த்தார்கள். அதைக்கேட்டதும் லேசாக சிரித்தார்களே தவிர எதுவும் பேசவில்லை. ஒரு நாள் முழுவதும் இப்படியே கழிந்தது.

அதன் பின் பரீத் கபீரிடம் விடைபெற்றுக்கொண்டு புறப்பட்டார்.‘ஏன் நீங்கள் பேசவல்லை’ என்று கபீரின் சீடர்கள் கேட்டனர். அதற்குக் கபீர் சொன்னார் ‘நாங்கள் இருவரும் உணர்ந்ததை சொல்வதற்கு வார்த்தைகள் கிடையாது. எல்லாமுணர்ந்த பரீத்திடம் பேசுவதற்கு என்னிடம் எதுவுமில்லை. அதனால் பேசவில்லை’ என்றார்.

இதேபோல பரீத்தின் சீடர்களும் அவரிடம் கேட்டார்கள். “ ஏன் நீங்கள் பேசவில்லை” என்று. “எங்கள் இரண்டு பேரில் யாராவது ஒருவர் பேச ஆரம்பித்திருந்தாலும் அதைப்போல் முட்டாள்த்தனம் வேறு எதுவும் இருக்கமுடியாது என்றார் அவர். ஞானிகள் இருவரும் பேசியிருந்தால் என்ன தெளிவு கிடைத்திருக்குமோ அதைவிட அதிகமான தெளிவு கிடைத்ததாம் சீடர்களுக்கு. உண்மையின் வடிவமான பரம்பொருள் பேசப்படவேண்டிய ஒன்றல்ல.அது உணரப்படவேணடிய ஒன்று என்பதை அவர்கள் புரிந்து கொண்டனர்.

ஒரு கணவனும் மனைவியும் நீண்ட நாட்கள் ஒருவரை ஒருவர் பிரிந்திருந்தார்கள். பல வருடங்களின் பின் அவர்கள் சந்தித்தார்கள். சந்தித்தவுடன் ஏதாவது கதைக்கலாம் அல்லவா? பேசவில்லை. இரண்டு பேரும் மௌனமாக இருந்தார்கள். ஒருவரை ஒருவர் ஆர் வமாக பார்த்துக்கொண்டிருந்தார்கள் அவ்வளவுதான்.

அந்தக் கணவனை தனியாகக் கூப்பிட்டு ஒருவர் விசாரித்தர் ‘ஏனப்பா இவ்வளவு நாட்கள் கழித்து சந்திக்கிறீர்கள்.முதலில் நீயாவது வாயைத் திறக் கக் கூடாதா? என்றார்.அதற்கு அவர் சொன்னார் ‘ஏற்கனவே நான் வாயைத் திறந்ததனால் தான் இவ்வளவு காலம் பிரிந்திருக்க வேண்டிவந்தது. அதனால் அவசரப்படாமல் பொறுமையாக இருக்கிறேன்’ என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# கடற்பரப்பை பாதுகாக்கும் உரிமை கடற்படைக்கு மாத்திரமே உண்டு

## இராணுவப் பேச்சாளர் தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கையைச் சுற்றியுள்ள முழுக்கடற்பரப்புக்கும் பாதுகாப்பு வழங்கும் பொறுப்பும் உரிமையும் கடற்படையை மட்டுமே சார்ந்தது என இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேதபெரேரா தெரிவித்துள்ளார்.

நாட்டைச் சுற்றியுள்ள களப்புகள், ஆழமற்ற கடற் பகுதிகள் ஆகியவையும் இவற்றில் அடங்கும் என்றும் அவர் கூறினார்.

விடுதலைப்புலிகளுக்கென தனியான கடல் வலயங்களோ உயர் பாதுகாப்பு வலையங்களோ இன்னமும் பெற்றுக்கொடுக்கப்படவில்லை.

போர்நிறுத்த உடன்படிக்கையிலும் இவ்வாறான ஏற்பாடுகள் எதுவும் மேற்கொள்ளப்படவில்லையெனத் தெரிவித்தார்.

வடக்கின் பாலாவிக் கடற்பரப்பில் தொழிலில் ஈடுபடும் மீனவர்களையும் அவர்களின் வள்ளங்களையும் விடுதலைப்புலிகள் தாக்கியதாகக் கூறப்படும் சம்பவங்கள் குறித்து போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவிடம் முறையிடப்பட்டுள்ளது.

இதுபோன்ற சம்பவங்கள் இனிமேலும் இடம்பெறாதிருப்பதை உறுதி செய்யுமாறு சகல துறைகளுக்கும் அறிவுறுத்தப்பட்டிருக்கிறது எனவும் கேணல் சுமேத பெரேரா மேலும் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, விடுதலைப்புலிகளால் தடுத்து வைக்கப்பட்டிருந்ததாகக் கூறப்படும் 10 மீனவர்கள் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

(ற-யே)

# புரிந்துணர்வு ஒப்பந்தத்திற்கு எதிரான மனுவில் பிரதிவாதிகளாக அமைச்சரவை உறுப்பினர்கள்

## சேர்க்குமாறு கோரி ஜே.வி.பி. மனு

(கொழும்பு)

புரிந்துணர்வு உடன்படிக்கையை ரத்துச் செய்யக் கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் ஐககிய மக்கள் சுதந்திர முன்னணி அரசின் அமைச்சரவை உறுப்பினர்களைப் பிரதிவாதிகளாகச் சோத்துக்கொள்ளுமாறு கோரி ஜே.வி.பி. மீள் மனுவொன்றை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளது.

யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை செல்லுபடியற்றதாக்கக் கோரி ஜே.வி.பி. மற்றும் ஜாதிக ஹெல உறுமய கட்சிகள் தாக்கல் செய்த வழக்கில் நேற்று முன்தினம் மீளாய்வு மனுவொன்று சேர்த்துக்கொள்ளப்பட்டது.

மேற்படி வழக்கிலேயே தங்கள் அமைச்சரவையில் அங்கம் வகிக்கும் தமது கட்சி உறுப்பினர்களையும் பிரதிவாதிகள் பட்டியலில் சேர்த்துக்கொள்ளுமாறு ஜே.வி.பி. கோரிக்கை விடுத்துள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சியின் போது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு ஒப்பந்தமானது நாட்டில் இறைமைக்குக் குந்தகம் ஏற்படுத்துமென்று சுட்டிக்காட்டி ஐ.தே.கட்சியின் தலைவர் ரணில்விக்கிரமசிங்க உட்பட அவரின் தலைமையில் அமைச்சரவையில் அங்கம் வகித்த அமைச்சர்களைப் பிரதிவாதிகளாகக் குறிப்பிட்டு இந்த வழக்கை ஜே.வி.பி. தாக்கல் செய்திருந்தது.

ஆனால் தற்போது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கம் பதவியேற்றுள்ள நிலையில், தற்போதும் அந்த ஒப்பந்தம் அமுல் செய்யப்படுவதால் தற்போதைய பிரதமர் ராஜபக்ஷ தலைமையிலான 33 பேர் கொண்ட அமைச்சரவையினை பிரதிவாதிகள் தரப்பில் சேர்த்துக் கொள்ளவேண்டுமென்று ஜே.வி.பி. நீதிமன்றத்தில் கோரிக்கை விடுத்துள்ளது.

ஜே.வி.பியின் நான்கு உறுப்பினர்கள் அமைச்சர்களாக அங்கம் வகிக்கும் அமைச்சரவையில் அமைச்சர்களான தமது கட்சியின் உறுப்பினர்களையும் நீதிமன்றம் பிரதிவாதிகளாகச் சேர்ததுக்கொள்ள வேண்டுமென்று ஜே.வி.பி. தனது மீள் மனுவில் வேண்டுகோள் விடுத்துள்ளது.

(த-8)

## இராசி பலன்

04.09.2004 *(ஆவணி 19, சனிக்கிழமை)*

**பஞ்சமி** காலை 6.53 மணிவரை
பரணி பி.இ. 12.29 மணிவரை
இராகுகாலம் 9.05- 10.35 மணிவரை
சுபநேரம் 3.05 - 4.35 மணிவரை

**மேடம்**
தடைப்பட்ட காரியம் கைகூடும், நண்பர் உதவி, போசன சுகம், ஜனவசியம்.

**இடபம்**
ஆரோக்கியக் குறைவு, பணவிரயம், சிந்தனை மிகுதி, பிரயாண அலைச்சல்.

**மிதுனம்**
கீர்த்தி, சகோதரர் உதவி, காரிய நன்மை, பணவரவு.

**கடகம்**
புதிய திருப்பம், பிரயாணம், உற்சாகம், மேன்மை.

**சிங்கம்**
உறவினர் சந்திப்பு, பணவிரயம், புதிய திட்டமிடல், ரோக நிலை.

**கன்னி**
திருடர்பயம், காரிய தாமதம், விருந்துபசாரம், வேலைப்பளு.

**துலாம்**
களஸ்திர நன்மை, எடுத்த காரியம் கைகூடும், பெரியோர் உதவி, உற்சாகம்.

**விருச்சிகம்**
நண்பர் உதவி, காரிய அனுகூலம், சுவாரஸ்யம், உடல் நலம்.

**தனுசு**
வியாபார நன்மை, சுபசெலவு, விருந்துபசாரம், உற்சாகம்.

**மகரம்**
மனச்சோர்வு, பிரயாணம், வேலைப்பளு, முயற்சி தாமதம்.

**கும்பம்**
காரிய நன்மை, பிரயாண சுகம், பிறர் உதவி, நல்ல செய்தி.

**மீனம்**
பொருள் சேதம், பணத் தட்டுப்பாடு, திடீர் நன்மை, தொழில் ஆர்வம்.

(பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது)

வளவன்

### இந்து கலாசார அமைச்சு ஊழியர்களின்

# பணி நீக்கத்திற்கு எதிராக உயர் நீதிமன்றம் தீர்ப்பு

(கொழும்பு)

இந்துகலாசார அமைச்சின் அலுவலகங்களில் கடமையில் இருந்தபோது பணிநீக்கம் செய்யப்பட்ட ஊழியர்களை மீண்டும் கடமையில் சேர்த்துக் கொள்ளுமாறு உயர்நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

முன்னைய அரசாங்கத்தின் ஆட்சிக் காலத்தில் இந்து கலாசார அமைச்சராக இருந்த தி.மகேஸ்வரனால் அவரது அமைச்சின் அலுவலகங்களில் 35 தமிழ் இளைஞர், யுவதிகள் பணிக்கமர்த்தப்பட்டனர்.

இந்நிலையில் கடந்த ஏப்ரல் மாதம் நடைபெற்ற பொதுத் தேர்தலின் பின்னர் ஆட்சிக்கு வந்த அரசாங்கம் இப்பணியாளர்களை சேவையில் இருந்து நிறுத்தியது.

இதனால்,பாதிக்கப்பட்ட பணியாளர்கள் தாம் பணிநீக்கம் செய்யப்பட்டமைக்கு எதிராக உயர்நீதிமன்றில வழக்கு ஒன்றை அண்மையில தாக்கல் செய்திருந்தனர்

இந்த வழக்கை விசாரணை செய்த நீதிமன்றம் மேற்படி 35 இளைஞர்,யுவதிகளையும் பணியில் இருந்து நீக்கியமை சட்டவிரோதமானது எனத் தீர்ப்பளித்துள்ளதுடன் அவர்களை மீண்டும் பணியில் சேர்த்துக்கொள்ளுமாறும் உத்தரவிட்டுள்ளது.

இதனையடுத்து இவர்கள் மீண்டும் கடமைக்கு திரும்பி வருவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

(ற-க)

# தொலைக் கல்வி பயிற்சியை நிறைவு செய்தோருக்கு சான்றிதழ்

(யாழ்ப்பாணம்)

யாழ்.இந்துக் கல்லூரியில் இயங்கும் தொலைக் கல்விப் பயிற்சி நெறிமூலம் பயிற்சியை முடித்துக் கொண்ட ஆசிரியர்கள் சிலருக்கு சான்றுதழ்கள் கிடைத்திருப்பதாக சிரேஷ்ட போதனாசிரியர் தெரிவித்துள்ளார்.

இதற்கமைவாக,கே.விஜிதா-ஆங்கில மொழி, சீ.பாலசிறி-ஆங்கில மொழி, க.தர்மசீலன- வர்தககம், த.வசுமதி-இந்துசமயம், யோ.நிரஞ்சனதேவி-இந்துசமயம், சி.புனேஸ்வரி-விஞ்ஞானம் ஆகியோருக்கான சான்றிதழ்களே கிடைக்கப் பெறறுள்ளதாகத் தெரிவிக்கபபட்டுள்ளது.

# பெண்கள் நினைத்தால் முடியாதது எதுவுமில்லை

ஒரு பெண் தனது வாழ்க்கையைத் துணையைத் தேர்ந்தெடுக்கும் போது அவன் எந்த விதமான தீய பழக்கங்களும் அற்றவனாக



இருப்பதையே விரும்புவாள். இந்த உண்மையைக் கடந்த காலங்களில் வெளிவந்த பத்திரிகைகளின் திருமண சேவைப் பகுதியில் ஆராய்ந்த போது தெரிந்து கொள்ள முடிந்தது. விளம்பரங்களில் இளமையானவர்களுக்கும், தீய பழக்கங்கள் அற்றவர்களுக்கும், அமைதியானவர்களுக்கும் மட்டுமே அழைப்பு விடுக்கப்பட்டிருந்தன.

அங்கு தீய பழக்கங்கள் என புகைத்தல், மதுபானம் அருந்துதல் என்பனவே முக்கியமாகக் குறிப்பிடப்படுகின்றன. ஆண்களில் மதுபானத்திற்கு அடிமையானவர்களை இரு பிரிவாகப் பிரிக்கலாம். அதாவது திருமணத்தின் முன் அடிமையானவர்கள், திருமணத்தின் பின் அடிமையாளவர்கள். எது எப்படியிருந்தாலும் ஒரு ஆணின் வாழ்க்கையில் மனைவியின் வரவு பெரிய மாற்றத்தையே ஏற்படுத்தும். அப்படி வந்த மனைவி கடமையைச் சரிவரச் செய்யும் பட்சத்தில், அவளை மனைவியாக அடைந்த ஆண் மகன் அடையும் மகிழ்ச்சிக்கு அளவே கிடையாது.

உலகில் மனிதனாகப் பிறக்கும் எந்த ஒரு ஆண் மகனும் குடிகாரனாகப் பிறப்பதில்லை. சந்தர்ப்பம், சூழ்நிலைகள்தான் அவனை மாற்றி விடுகின்றன. அவனைத் தொடர்ந்து குடிக்கச் செய்வதும், குடியைத் திருத்துவதும் அவன் மனைவியின் கையிலேயே தங்கியுள்ளது.

குடும்பத்தில் எழும் எந்தப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளை இருவருமே சேர்ந்து எடுக்கவேண்டும். கணவன் மனம் உடைந்து இருக்கும் சமயங்களில் மனைவி உறுதுணையாக இருக்க வேண்டும். அப்படியிருக்க மனைவி தவறும் பட்சத்தில் கணவன் மன நிம்மதி தேடி மதுபானத்திற்கு அடிமையாகின்றான். இதனை மனைவி உணராமல் கணவனைத் திட்டித் தீர்ப்பதால் கணவன் மேலும் துர்நடத்தைகளுக்கு அடிமையாக முற்படுவான். மனைவிக்கு மட்டுமல்ல கணவனுக்கும் சுய கௌரவம், மென்மையான உள்ளம் உண்டு. இவை பாதிப்படையும் சமயத்திலேயே அவன் மதுவை நாடுகின்றான். மனதிலிருக்கும் பிரச்சினைகளையும், விருப்பமில்லாத உணர்வுகளையும் இல்லாமல் செய்வதற்கும், அகற்றுவதற்கும் மது ஒன்று தான் தீர்வு என அவன் தனிமையாக இருக்கும் சந்தர்ப்பங்களில் முடிவெடுக்கின்றான். இச் சமயங்களில் மனைவி அவனோடு ஆறுதலாகக் கதைப்பதாலும் உறுதுணையாக இருப்பதாலும் அவனுக்கு மன உறுதியை ஏற்படுத்துவதாலும் அவனது பிரச்சினைகளை மனைவி இலகுவாகத் தீர்ப்பதை உணர்வாள்.

உதாரணமாகத் திருமணம் முடித்து மூன்று மாதமே வாழ்க்கை நடத்திய பெண்மணி விவாகரத்துக்கேட்டு காவல் நிலையத்தில் புகார் கூற வந்திருந்தாள். தான் திருமணம் செய்யுமுன் கணவன் எந்த விதமான தீய பழக்கங்களும் அற்றவர் என்றே கூறித் திருமணம் செய்தார்கள் என்றும், இந்த விடயம் முற்றிலும் பொய் என்பதை தாம் பின்பு அறிந்து கொண்டதாகவும் கூறிக் கவலைப்பட்டார்.

விவாகரத்தை மேற்கொள்ள முன் மனைவியானவள் பிரச்சினைகளை ஆராய்ந்து தீர்க்க முயற்சி எடுக்க வேண்டும். இதனால் கணவனும் திருந்துவதற்கு சந்தர்ப்பம் கிடைக்கின்றது. மனமுடைந்த கணவனுக்கு நம்பிக்கையூட்டி, தெம்பூட்டி எல்லாப் பிரச்சினைகளையும் மனைவி பகிர்ந்து கொள்ளவும், அதனை ஒவ்வொரு வழியிலும் கணவனுக்கு உணரச்செய்யவும் வேண்டும். மனைவியானவள் தனது குடிப் பழக்கமுடைய கணவனைத் திருத்தும் முயற்சியில் உறுதியாக இருக்கவேண்டும். கணவன் குடிபோதையில் தப்பாகப் பேசியிருந்தால், தப்பாக நடத்திருந்தால் அவனைப் பழி வாங்கும் எண்ணம் மனைவியின் மனதில் தோன்றவே கூடாது. சில மனைவிமார்கள் தங்கள் கணவர் விருந்துபசாரங்களில் மதுபானம் பாவிப்பதைப் பெருமையாகக் கருதுவார்கள். அப்படியான எண்ணங்களில் மிதக்கும் மனைவிமார்கள் கணவனின் குடிப் பழக்கத்தை ஊக்குவிக்கின்றார்கள். கணவன் குடிபோதையில் இருக்கும் போது நியாயம் பேசுவதையும், தர்க்கிப்பதையும் மனைவி நிறுத்த வேண்டும். மனதில் இரக்க குணத்தோடு நிலைமையைச் சரிவரப் புரிந்து கணவனின் சுக, துக்கங்களை பகிர்ந்து கொள்வதால் அன்பான குடிகாரக் கணவனை நிச்சயமாக ஓர் நாள் மாற்றலாம். இவற்றிற்கெல்லாம் சிகரமாக மனைவிக்குப் பொறுமை வேண்டும். ○

**புதியவன்**

*நன்றி தமிழ் உலகம்*

---

## யாழ்.மாவட்டத்தின் கல்விநிலைமை பெரும் வீழ்ச்சியடைந்து வருகிறது

### யாழ். அரச அதிபர் சுட்டிக்காட்டு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தின் கல்வித் தேவைகளுக்காக பெருமளவு நிதி ஒதுக்கீடு செய்யப்படுகின்ற போதும் யாழ்.மாவட்டத்தின் கல்வி நிலை வீழ்ச்சியடைந்துகொண்டே செல்கின்றது என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் செ.பத்மநாதன் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் வீரசிங்கம் மண்டபத்தில் இடம்பெற்ற பட்டதாரிகளுக்கான நியமனப்பத்திரம் வழங்கும் ஆரம்ப வைபவத்தில் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்.

கடந்த ஈரண்டு வருடங்களாக யாழ.மாவட்டத்தின் கல்விச் செயற்பாடுகளுக்காக 500 மில்லியன் ரூபா நிதி ஒதுக்கப்பட்ட போதும், யாழ்.மாவட்டத்தின் கல்விநிலை 1995 ஆம் ஆண்டிற்கு பிறகு கடும் வீழ்ச்சியடைந்துள்ளது.

இதனை அண்மைக்காலக் கல்விப் பொதுத் தராதர சாதாரண தரம் மற்றும் உயர்தரப் பெறுபேறுகள், 5ஆம் ஆண்டிற்கான புலமைப்பரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் வெளிப்படுத்தியுள்ளது என அவர் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார். (ற-19)

## வடகிழக்கில் பற்றாக்குறையாகவுள்ள ஆசிரியர் விபரத்தை அனுப்புமாறு கல்வி அமைச்சு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

வடக்குக் கிழக்குப் பகுதிகளில் பற்றாக்குறையாகவுள்ள ஆசிரியர் எண்ணிக்கை விபரத்தைத் துறை ரீதியாக அனுப்பி வைக்குமாறு வடக்குக் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சிடம், கல்வி அமைச்சு கோரியுள்ளது.

இதேவேளை, வடக்குக் கிழக்குப் பகுதிகளுக்கென ஆயிரம் ஆசிரியர்களைத் தெரிவு செய்வதற்காக நடாத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகள் கல்வி அமைச்சுக்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளன.

இப் பெறுபேறுகள் நேற்று வெள்ளிக்கிழமை வெளியிடப்படவிருந்தபோதும் தவிர்க்க முடியாத காரணத்தால் ஒருசில நாட்கள் தாமதமாகலாம் எனக் கல்வி அமைச்சு அறிவித்துள்ளது. (ச-5)

## இலங்கை பொலிஸ் சேவைக்கு 138 ஆவது ஆண்டு நிறைவு

(கொழும்பு)

இலங்கையில் பொலிஸ் சேவை ஆரம்பிக்கப்பட்டு 138 வருடங்கள் நிறைவு பெறுகின்றது. இதனையொட்டி விசேட நிகழ்வுகள் ஏற்பாடாகியுள்ளன.

இலங்கையில் பொலிஸ் சேவை 1866 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. இலங்கையின் முதலாவது பொலிஸ்மா அதிபராக ஜோர்ஜ் வின்சன் றொமின்கன் கம்மல் கடமையாற்றியிருந்தார்.

இந்த நாளில் இருந்து நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் நிலைநாட்டுவதற்கும், பொதுச் சொத்துகளைப் பேணுவதிலும் பொலிஸார் அரும்பெரும் சேவையாற்றினர்.

நாட்டின் சகல பகுதிகளிலும் உள்ள பொலிஸ்நிலையங்களில் இலங்கை பொலிஸ் சேவையின் 138 வது ஆண்டு நிறைவுவிழா கொண்டாட்டங்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

இவற்றில் சமயநிகழ்ச்சிகளுக்கு முக்கியத்துவம் கொடுக்கப் பட்டுள்ளது. (ற-ப)

## இலங்கை – சீன உறவுகளை மேம்படுத்துவது குறித்து ஆராய்வு

(கொழும்பு)

இலங்கையில் கூடுதலாக முதலீடு செய்ய பௌத்த சாசன அமைச்சரும், பிரதிப் பாதுகாப்பு அமைச்சருமான ரட்ண ஸ்ரீ விக்கிரமநாயக்க, சீனக் கைத்தொழில் அதிபர்களுக்கு அழைப்பு விடுத்துள்ளார்.

கடந்த புதன்கிழமை காலை சீனாவின் யூனான் மாநிலத் தூதுக் குழுவை, அமைச்சர் கொழும்பில் சந்தித்துப் பேசியபோதே இந்த அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

இந்தச் சந்திப்பில் இருதரப்பு உறவுகளை வலுப்படுத்துவது, பௌத்த கோட்பாடுகளை மேம்படுத்துவது போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

இதன்போது பௌத்த நாடுகளுக்கு மத்தியில் நெருங்கிய உறவைக் கட்டியெழுப்புவதற்குத் தமது நாடு முயற்சி செய்து வருவதாகத் சீனத் தூதுக் குழுவின் தலைவர் தெரிவித்துள்ளார்.(ற-யே)

## நல்லைச் சூழலில் இன்று

(நல்லூர்)

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தையொட்டி நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தினால் தெல்லிப்பழை துர்க்கா தேவி தேவஸ்தானத்தின் ஆதரவில், நல்லூர் துர்க்கா மணிமண்டபத்தில் தினமும் மாலை 6.30 மணி முதல் 7.30 மணிவரை நடாத்தப்பட்டு வரும் தெய்வீக இசையரங்கில் 15 ஆம் நாளான இன்று தவநாதன் றொபேட்டின் இசைக் கச்சேரி இடம்பெறவுள்ளது.

அத்துடன், இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் யாழ்.மாவட்ட அலுவலகத்தினால் நாவலர் மணி மண்டபத்தில் தினமும் இரவு 7 மணிக்கு நடாத்தப்பட்டு வரும் முத்தமிழ் நிகழ்வுகளில் இன்று, செல்வி க.சிவயோகறாணி வழங்கும் இசை அமுதம் இடம்பெறவுள்ளது.

மற்றும், தினமும் மாலை 6 மணிக்கு நல்லூர் மேற்கு வீதி ஸ்ரீ முத்து விநாயகர் ஆலய மண்டபத்தில் நடைபெற்று வரும் கானகதா வாரிதி பிரம்ம ஸ்ரீ சிவ.வை. நித்தியானந்த சர்மாவின் கம்பராமாயண தெய்வீக இசைப்பேருரைத் தொடரில் இன்று 'கைகேயி வரம்' எனும் தலைப்பில் இசைப் பேருரை இடம்பெறவுள்ளது. (ற-7)

## இரதோற்சவம்

(பொன்னாலை)

பொன்னாலை வரதராஜப் பெருமாள் ஆலயத்தின் வருடாந்த இரதோற்சவப் பெருவிழா எதிர்வரும்6 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 10.00 மணிக்கு நடைபெறவுள்ளது.(ற-49)

## பட்டமளிப்பு விழா

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைச் சைவப் புலவர் சங்கத்தின் 44வது ஆண்டு நிறைவும், சைவப் புலவர் பட்டமளிப்பு விழாவும் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு வண்ணை நாவலர் மகாவித்தியாலயத்தில் சைவப்புலவர் மு.திருஞானசம்பந்தப் பிள்ளை தலைமையில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில், முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடாதிபதி பேராசிரியர் ப.கோபாலகிருஷ்ண ஐயர் கலந்து கொள்ளவுள்ளார். (ற-8)

## கிழக்குப் பல்கலையின் வளாகம் திருமலையில்

திருகோணமலையிலிருந்து நிலாவெளி நோக்கிச் செல்லும் நெடுஞ்சாலையில் உள்ள கோணேசபுரி என்ற இடத்தில் கிழக்குப் பல்கலைக்கழகத்தின் புதிய வளாகம் ஒன்று அமைக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது திருகோணமலை நகரில் இந்த வளாகம் போதிய இடவசதியின்றி இயங்கி வருவது குறிப்பிடத்தக்கது.

புதிதாக அமைக்கப்படவுள்ள இவ் வளாகம் 200 ஏக்கர் பரப்பில் மிகப பிரம்மாண்டமாக உருவாக்கப்படவிருப்பதாக அறிவிக்கப் பட்டுள்ளது.

இந்தப் புதிய வளாகம் அமைக்கப்படுவது தொடர்பில் இரு நாள் செயலமர்வு ஒன்று திருகோணமலை நகரில் நடத்தப்பட்டது. இதில் பொது மக்கள், மாணவர்கள், அரசாங்க அதிகாரிகள், கல்விமான்கள் எனப் பலதரப்புப் பிரதிநிதிகளும் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகின்றது. (ற)

## செங்கலடியில் கைதான தமிழ் இளைஞர்கள் விடுதலை

செங்கலடியில் கடந்த 31 ஆம் திகதி இரு தமிழ் இளைஞர்கள் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

செங்கலடி மக்கள் வங்கிக்கு அருகாமையில் சோதனை நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த இராணுவத்தினர் வீதியால் சென்று கொண்டிருந்த இரு தமிழ் இளைஞர்களையும் அழைத்து பலத்த விசாரணைகளை மேற்கொண்டு இருவரையும் கைதுசெய்து கொம்மாதுறை இராணுவ முகாமுக்கு அழைத்துச் சென்றனர்.

இரு இளைஞர்களும் முகாமில் வைத்து தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டதன் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

அண்மைக் காலமாக செங்கலடிப் பகுதியில் இராணுவத்தினரின் சோதனைக் கெடுபிடிகள் அதிகரித்துக் காணப்படுவதாகவும் இதனால் பொது மக்கள் பல்வேறுபட்ட சிரமங்களை எதிர்கொண்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (ற-121)

ஆற்றுவார் ஆற்றல் இகலாமை போற்றுவார்
போற்றலு ளெல்லாம் தலை - குறள்

வலம்புரி

# பின்தங்கிய பிரதேசங்கள் கவனிக்கப்படவேண்டும்!

இலங்கை போன்ற வறுமை நாடுகளில் தனியார் முயற்சியில் வேலை வாய்ப்பென்பது மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது.

தனியார் நிறுவனங்கள் செயற்படுகின்ற போதிலும் அவற்றில் இணைந்து பணியாற்றுவதற்கு இளைஞர், யுவதிகள் விரும்புவதில்லை. இதனால் வேலையற்றவர்களின் எண்ணிக்கை நாட்டில் அதிகரித்துள்ளது.

குறிப்பாக பல்கலைக் கழகத்தில் கல்வி கற்ற பட்டதாரிகள் வேலையற்றிருப்பது இங்கு நோக்குதற்குரியது.

தனியார் நிறுவனங்கள் பல செயற்படுகின்ற போதிலும் அவற்றில் இணைந்து பணியாற்றுவதற்கு வேலையற்ற பட்டதாரிகள் முன்வராமைக்கு அடிப்படைக் காரணம் அவர்கள் அரச நியமனத்தை எதிர்பார்த்திருப்பதேயாகும்.

இவ்வாறு பட்டதாரிகள் அரச அமைப்புகளில் வேலை செய்வதற்கு அவாக்கொள்வதற்கான அடிப்படைக் காரணம் அரச நிறுவனங்களில் உள்ள பல்வேறு சலுகைகளாகும்.

பொதுவாக இலங்கையிலுள்ள அரச அமைப்புகள் இறுக்கமான நிர்வாகக் கட்டமைப்பைக் கொண்டிருப்பதில்லை. இதனால் அங்கு கடமையாற்றுவோரில் பலர் தமது கடமையைத் தட்டிக் கழித்துவிட்டு கடமை நேரத்தில் சொந்த அலுவல்களில் ஈடுபடுகின்றனர்.

இவ்வாறு ஏமாற்றுவித்தை காட்டக்கூடிய ஓர் நிர்வாக அமைப்பை அரச நிறுவனங்கள் கொண்டிருப்பதால் அந்த அமைப்புகளில் நியமனம் பெறுவதை பட்டதாரிகள் விரும்புகின்றனர்.

இதற்கு மேலாக இலங்கையிலுள்ள தனியார் அமைப்புகள் நியமனங்களை வழங்கும்போது ஊழியர்களின் நலன்களைக் கவனிக்கும் நடவடிக்கைகள் எதனையும் பெரிதாக மேற்கொள்வதில்லை.

ஆக உழைப்பை உச்சமாகப் பெற்றுக்கொள்வதே தனியார் நிறுவனங்களின் கொள்கையாக இருப்பதால் அந்த அமைப்புகளில் வேலை வாய்ப்பைப் பெற பட்டதாரிகளோ மற்றும் வேலையற்றவர்களோ விரும்பவில்லை.

இவ்வாறு பட்டதாரிகள் அரச நியமனங்களை மட்டும் நம்பியிருப்பதால் மனித மூலதனம் வணடிக்கப்படுவதுடன் தனியார் துறையினர் தகுதிவாய்ந்த ஊழியத்தைப் பெறமுடியாதுள்ளது.

எனவே பல்கலைக் கழகப் படிப்பை நிறைவு செய்த பட்டதாரிகள் அரச நியமனங்களைப் பெறுவதில் காட்டும் அதேயளவு அக்கறையை தனியார் துறையில் நியமனம் பெறவும் காட்டவேண்டும். இதற்கு அமைவாக தொழிற் சட்டங்களை அமுல்படுத்த அரசு உரிய நடவடிக்கை எடுப்பது அவசியமாகும்.

இவை ஒருபுறமிருக்க தற்போது அரச நியமனங்களைப் பெறும் வேலையற்ற பட்டதாரிகள் தமக்கு வழங்கப்படும் நியமனங்களை தாம் வசிக்கும் இடங்களுக்கு அருகிலேயே பெற்றுக்கொள்ள முயற்சிக்கின்றனர்.

இச் சந்தர்ப்பத்தில் செல்வாக்குக் கலாசாரம் முளைவிடுகிறதெனலாம்.

போராட்டம் நடத்தி நியமனம் பெறும் பட்டதாரிகள் தமது சேவைகளை பின்தங்கிய பிரதேச மக்களுக்கு வழங்கத் தாமாகவே முன்வரவேண்டும்.

பின்தங்கிய பிரதேசங்களிலுள்ள பாடசாலைகள் மற்றும் அரச நிறுவனங்களில் பட்டதாரிகளை நியமிப்பதன் ஊடாக அந்த மக்களுக்கு ஓர் சிறந்த சேவை கிடைப்பதற்கு வாய்ப்பளிக்க அரச அதிகாரிகள் முன்வரவேண்டும்.

தெரிந்தவர் அறிமுகமானவர் என்ற கோதாவில் வசதியான பிரதேசங்களில் உள்ள அரச நிறுவனங்களில் பட்டதாரிகளை குவிப்பது மிகவும் மோசமான விளைவுகளை ஏற்படுத்துமென்பதால் "செல்வாக்கு" என்பதற்கப்பால் பின்தங்கிய பிரதேசங்களின் கஷ்ட நிலைகள் நக்கப்படவேண்டும் என்ற நிலையில் அரச அதிகாரிகளும் நியமனம் பெறும் பட்டதாரிகளும் இணைந்து செயலாற்ற வேண்டும்.

# தமிழ் மக்களின் கல்வியைச் சிதைக்கும் சக்திகளுக்கு எதிராகப் போராடவேண்டும்

## தமிழீழக் கல்விக் கழகப் பொறுப்பாளர் உரை

(வவுனியா)

தமிழ் மாணவர்களின் கல்வி அபிவிருத்திச் செயற்பாடுகளை தமிழீழத் தேசியத் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் முழுமூச்சுடன் முன்னெடுத்து வருகிறார் எனத் தமிழீழக் கல்விக்கழகப் பொறுப்பாளர் இளங்குமரன் தெரிவித்துள்ளார்.

கனகராயன்குளம் மத்திய மகா வித்தியாலயத்தில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள மூன்று மாடிக் கட்டடத்தின் திறப்பு விழா நேற்று முன்தினம் நடைபெற்றது.

அதில் கலந்து கொண்டு சிறப்புரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

படையினர் வன்னி மண் மீது மேற்கொண்ட ஜெயசிக்குறு படை நடவடிக்கைக்கு எதிராக மாவீரர்கள் இரத்தம் சிந்திச் சமராடி வித்தாகி மீட்டெடுத்த இடத்தில், எதிரிகளால அழிக்கப்பட்ட பாடசாலை ஒன்றின் புதிய கட்டடத் தொகுதி திறக்கப்படுவது மன நிறைவுக்குரியதாகும்.

யுத்தநிறுத்த உடன்பாடு ஏற்பட்டு இரண்டரை ஆண்டுகள் கடந்த நிலையில் தமிழர் தாயகப் பகுதிகளில் உள்ளவர்களின் கல்வி அபிவிருத்திக்கு அரசாங்கம் எந்தவித உதவிகளையும் செய்யவில்லை.

அரசாங்கம் 1970ஆம் ஆண்டுகளில் தரப்படுத்தல் நடைமுறையினைக் கொண்டு வந்து, தமிழ் மாணவர்களின் பல்கலைக்கழக அனுமதியில் பல தடைகளை ஏற்படுத்தி வந்தது.

இன்றும் தமிழ் மாணவர்களின் கல்வித் தரத்தினை உயரவிடாது சிதைப்பதில் அரசு முழுமூச்சுடன் செயற்பட்டு வருகின்றது. அரசாங்கத்தின் இச் செயற்பாடுகளை இனம் கண்டு அதற்கெதிராகப் போராட வேண்டிய தேவை தமிழ்க் கல்விச் சமூகத்திடம் உள்ளது.

மாணவர்கள் நாட்டின் போர்ச் சூழலைக் காரணம் காட்டி கல்வியில் பின்தங்கி விடாது, தடைகளை எதிர்கொண்டு கல்விப் பாதையில் முன்னேற வேண்டும்.

அரசு உதவிகள் புரியும் என்று நம்பியிராமல் சொந்த முயற்சியைக் கல்விப் பாதையில் செலுத்த வேண்டும் எனக் குறிப்பிட்டார்.

(ந-121)

## மீனவர் இளைப்பாறும் மண்டபம் இன்று திறந்து வைப்பு

யாழ். அரசாங்க அதிபரினால் வழங்கப்பட்ட சுமார் ஒரு இலட்சத்து 15 ஆயிரம் ரூபா நிதியுதவியின் மூலம் பருத்தித்துறை பிரதேச சபையால் நிர்மாணிக்கப்பட்ட மணற்காடு மீனவர் இளைப்பாறும் மண்டபம் இன்று சனிக்கிழமை சம்பிரதாய பூர்வமாகத் திறந்து வைக்கப்படவுள்ளது.

பருத்தித்துறை பிரதேச சபைச் செயலாளர் எஸ். பசுபதி தலைமையில் நடைபெறவுள்ள இத் திறப்புவிழா நிகழ்வில் மண்டபத்தை யாழ். அரச அதிபர் எஸ். பத்மநாதன் திறந்து வைக்கவுள்ளார்.

யாழ். மாவட்ட நியாப் பிரதித்திட்டப் பணிப்பாளர் கே. பாலகிருஷ்ணன் யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் கே. இராசையா மற்றும் வடமராட்சி கிழக்கு கடற்புலிகளின் அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ். தீபன் ஆகியோர் இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொள்ளவுள்ளனர்.

யாழ். அரச அதிபர் குடத்தனை வீதி புனரமைப்புக்கென 39 இலட்சம ரூபா நிதியையும் மணற்காடு வீதி புனரமைபபுக்கென 11 இலட்சம் ரூபா நிதியையும் வழங்கியதையடுத்து பருத்தித்துறை பிரதேசசபை இவ்வீதிகளைப் புனரமைத்து வருகின்றமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. (ந-52)

## இலங்கை வங்கிக் கிளைகளில் 14+ கணக்கு அறிமுகம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை வங்கி தனது 65 ஆவது ஆண்டு நிறைவு விழாவை யொட்டி "14+" என்ற புதிய வைப்புக்கணக்கு ஒன்றை இலங்கை பூராகவும் அறிமுகப்படுத்தியுள்ளது.

இவ் 14+ வைப்புக் கணக்கில் 14வயதிற்கும் 18 வயதிற்கும் உட்பட்டவர்கள் பணவைப்புச் செய்யலாம். இப் புதிய வைப்புக்கணக்கில் வைப்புச்செய்பவர்களுக்கு சாதாரண வட்டி வீதத்தைவிட 5% வட்டி அதிகமாக வழங்கப்படும்.

இதுவரை காலமும் 18 வயதிற்கு மேற்பட்டவர்களே இலங்கை வங்கியில் வைப்புச்செய்யமுடியும் ஆனால், இக்கணக்கின் மூலம் தற்போது 14வயதிற்கும் 18வயதிற்கும் இடைப்பட்டவர்களும் விசேட சலுகையுடன் வைப்புச் செய்யலாம். (ந-19)

## சத்தியக் கடதாசிகளைச் சமர்ப்பித்து அடையாள அட்டைகளைப் பெறலாம்

(கொழும்பு)

தேசிய அடையாள அட்டைகள் இல்லாதோருக்கு ஓராண்டுக்குள் அவற்றை விநியோகிக்க முடியும் என்று ஆட்பதிவுத் திணைக்களம் தெரிவித்துள்ளது.

தேசிய அடையாள அட்டைகள்வழங்கும்விசேட திட்டத்தின் கீழ் இவை வழங்கப்படும் என மேலும் தெரிவிக்கப பட்டுள்ளது.

தேசிய அடையாள அட்டைகளைப்பெறுவதற்கான ஆவணங்கள் இல்லாதோர் சத்தியக் கடதாசிகளைச் சமர்ப்பித்து அடையாள அட்டைகளைப் பெற்றுக்கொள்வதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இதேவேளை, இலங்கையில் வாழும் 25 இலட்சம் பேரிடம் தேசிய அடையாள அட்டைகள் இல்லை எனத் தெரிவிக்கப் பட்டுள்ளது.

இந்நிலையில் எதிர்வரும் 8 ஆம் திகதி புதன்கிழமை தேர்தல வாக்கெடுப்புக்களின் போது அடையாள அட்டைகளைக் கவனிப்பது குறித்து சட்டமூலம் ஒன்றும் பாராளுமனறில் சமர்ப்பிக்கப்படவுள்ளது. (ந-ப)

## இணையத்தள கேபிள்கள் முற்றாகப் புனரமைப்பு

(கொழும்பு)

சேதமடைந்த இணையத்தள கேபிள்கள் முற்றாகப் புனரமைக்கப்பட்டுள்ளன என ஸ்ரீலங்கா ரெலிக்கொம் அறிவித்துள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்பு கடலுக்கடியில் இணையத்தள கேபிள்களில் ஏற்பட்ட கோளாறு காரணமாக இணையத்தள சேவைகள் ஸ்தம்பிதமடைந்திருந்தன.

இதனையடுத்து மேற்கொள்ளப்பட்ட திருத்த வேலைகளின் காரணமாக தற்பொழுது மீண்டும் இணையத்தள சேவைகள் சீராக்கப்பட்டுள்ளன.

இவ்வாறு சீராக்கப்பட்ட இணையத்தள சேவை .இனிமேல் பாதிப்படையமாட்டாது என ரெலிக்கொம் நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது. (ந-ப)

## காவலரண் அமைக்கும் முயற்சியில் கடற்படை

(திருகோணமலை)

திருகோணமலை புல்மோட்டை பகுதியில் சிறிலங்கா கடற்படையினர் காவலரண் ஒன்றை அமைக்கும் முயற்சிகளில் ஈடுபட்டுள்ளதாகத் தெரியவருகிறது.

இது தொடர்பாக போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவுக்கு இப்பகுதி மக்களும் புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் எஸ். எழிலனும் முறைப்பாடு செய்துள்ளனர்.

போர்நிறுத்தப் புரிந்துணர்வு ஒப்பந்தத்தின்படி, சிறிலங்கா படையினர் பொது மக்கள் வாழும்பகுதியில் புதிய முகாமகளையோ காவலரண்களையோ அமைப்பது யுத்த மீறலாகும் என அம் முறைப்பாட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ந-8)

## வசதிகுறைந்த (உ/த) மாணவர்களுக்கு மிலேனியம் புலமைப்பரிசில்

(கொழும்பு)

க.பொ.த. உயர்தர வகுப்புக்களில் கல்வி பயிலும் வசதி குறைந்த மாணவர்களுக்கு மிலேனியம் புலமைப்பரிசில் திட்டத்தின் கீழ் புலமைப்பரிசில் கொடுப்பனவுகளை வழங்குவதற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

குறிப்பாக வடக்கு - கிழக்கு மாகாணப் பாடசாலைகளில் உயா வகுப்பில் கல்வி பயிலும் வசதி குறைந்த மாணவர்கள், தமது விண்ணப்பங்களை தாமதிக்காமல் உடனடியாக பாடசாலை அதிபர்கள் ஊடாக வலயக் கல்வி அலுவலகங்களில் கையளிக்குமாறு மாகாணக் கல்விப் பணிப்பாளர் இ. விசாகலிங்கம் கேட்டுள்ளார்.

தெரிவு செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்களை இம் மாதம் 24ஆம் திகதிக்கு முன்னர், ஜனாதிபதி செயலகத்திற்கு அனுப்பிவைக்க வேண்டியுள்ளதால், உடனடியாக உரிய மாணவர்களை இதற்காக விண்ணப்பிக்குமாறும் அவர் மேலும் கேட்டுள்ளார். (ந-க)

## குவைத்திலிருந்து வெளியேற்றப்பட்டவருக்கு 3 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாய் நட்டஈடு

(யாழ்ப்பாணம்)

கடந்த 2000ஆம் ஆண்டு குவைத நாட்டில் இருந்து குவைத் அரசாங்கத்தினால் வெளியேற்றப்பட்ட இலங்கையர்களுக்கு இலங்கை அரசாங்கத்தினால் நடடஈடு வழங்கப்பட்டுள்ள போதும் பிறவுண வீதி கொக்குவிலைச் சேர்ந்த பா. அருள்தாசன் தனக்கு நஷ்டஈடு வழங்கப்படவில்லை எனக் கூறி இவர் சென்ற ஆண்டு 6ஆம் மாதம் யாழ். மனித உரிமை ஆணைக்குழுவிடம் முறைப்பாடு செய்திருந்தார்.

இவ் முறைப்பாட்டையடுத்து, யாழ். மனித உரிமை ஆணைக்குழு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சுடன் தொடர்பு கொண்டு மேற்படி நபருக்கு நஷ்டஈடாக 3 இலட்சத்து 85 ஆயிரம் ரூபாவை கடந்த செவ்வாய்க்கிழமை பெற்றுக்கொடுத்துள்ளது. (ந-19)

## தினசரி தியானம்

### விவேகச் சிந்தனைகள்

அறிவு, உள்ளம் ஆகிய இரண்டில் எதைப் பின்பற்றுவது என்ற போராட்டம எழும்போது உள்ளம் சொல்வதையே நீங்கள் பின்பற்றுங்கள். ஏனென்றால் அறிவாற்றலால் ஒருபோதும் செல்லவே முடியாத மிகவும் உயர்ந்த மன நிலைக்கு இதயம் ஒருவனை அழைத்துக்கொண்டு போகிறது.

சுவாமி விவேகானந்தர்

# இந்திய மீனவர்களின் 64 ரோலர்கள் கடற்றொழில் அமைச்சிடம் கையளிப்பு

## இவற்றில் 6 ரோலர்கள் கடற்படையினருக்கு

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்பரப்பினுள் அத்துமீறி நுழைந்து கடற்றொழிலில் ஈடுபட்டுக்கொண்டிருந்த இந்திய மீனவர்களிடமிருந்து இலங்கைக் கடற்படையினரால் இதுவரை பறிமுதல் செய்யப்பட்ட 64 ரோலர்களும் கடல்தொழில் அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

இவற்றில் கடற்படையினரின் வேண்டுகோளுக்கிணங்க 6 ரோலர்களை காரைநகர் கடற்படையினருக்கு கடற்தொழில் திணைக்களம் வழங்கியுள்ளது.

இந்தக் கைளிப்பு வைபவம் கடந்த 31 ஆம் திகதி இடம்பெற்றது.

இதேவேளை நான்கு ரோலர்கள் தீவுப்பகுதி மக்களின் போக்குவரத்துக்கென வழங்கப்பட்டுள்ளது.

யாழ். அரச அதிபர் செ. பத்மநாதனால் கடற்றொழில் திணைக்களத்திடமிருந்து பொறுப்பேற்கப்பட்ட நான்கு ரோலர்களும் நேற்றுக் காலை 10 மணியளவில் ஊர்காவற்றுறை துறைமுகத்தில் வைத்து ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் சிறிமோகனிடம் கையளிக்கப்பட்டன.

இவை திருத்தப்பட்டு தீவுப் பகுதி மக்களின் போக்குவரத்துக்குப் பயன்படுத்தப்படவுள்ளது.

இக் கையளிப்பு வைபவத்தில் யாழ். உதவி அரசாங்க அதிபர் வீரபத்திரப்பிள்ளையும் கலந்து கொண்டார்.

எஞ்சிய 54 ரோலர்களும் ஏலத்தில் விடப்படவுள்ளன. (ச-19)

# கப்பலை விடுவித்த விவகாரம் ரெலிக்கொம் திரிசங்குநிலையில்

(கொழும்பு)

சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் சர்வதேச இணைப்புக்களுக்கான கேபிள்களை இலங்கை கடற்பரப்பில் சேதப்படுத்தியதாக குற்றம் சாட்டப்பட்டுள்ள கப்பலை விடுவித்தது குறித்து சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்திற்கும், தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சிற்கும் இடையே சிக்கல்கள் தோன்றியுள்ளன.

சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் வேண்டுகோளுக்கு ஏற்பவே தாம் அந்த கப்பலை விடுவித்ததாக இலங்கை கடற்படையின் உயரதிகாரியொருவர் தெரிவித்தார். கடந்த மாதம் 30ஆம் திகதி சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனம் இந்த கப்பல் நிறுவனத்திற்கு எதிராக தாக்கல் செய்திருந்த வழக்கை வாபஸ் பெற்றிருந்தது. எனினும் எதிர்காலத்தில் மாற்று வகையிலான சட்ட நடவடிக்கை எடுக்கும் உரிமையுடனேயே இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டதாக சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனத்தின் உயரதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

சர்வதேச இணைப்பு கேபிள் சேதமடைந்தமைக்கு தடுத்து வைக்கப்பட்டிருந்த கப்பலே காரணம் என்று இதுவரை ஊர்ஜிதம் செய்யப்படவில்லை. இது தொடர்பான ஆய்வுகளை மேற்கொண்ட சிங்கப்பூர் கப்பலின் முழுமையான அறிக்கை வெளியிடுவதற்கு மேலும் மூன்று மாதங்கள் செல்லும் என்று சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனம் தெரிவித்துள்ளது. எனவே தொடர்ந்தும் மூன்று மாதங்களுக்கு இந்த கப்பலை தடுத்து வைத்திருப்பதால் ஏற்படும் சிக்கலை தவிர்ப்பதற்காகவே கப்பலை விடுவித்ததாக சிறிலங்கா ரெலிக்கொம் நிறுவனம் தெரிவித்துள்ளது.(ச)

## அரசுக்கு...

ஆதரவை வழங்கவுள்ளோம். ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கம் மேற்கொண்டுவருகிற நடவடிக்கைகளை நாம் அவதானித்து வருகின்றோம். அரசாங்கம் தற்பொழுது பெரும் நெருக்கடியில் இருந்து வருகிறது. இதனாலேயே அரசுக்கு ஆதரவு வழங்கும் இத் தீர்மானத்தை நாம் எடுத்துள்ளோம்.

அரசாங்கத்திற்கு ஆதரவு வழங்குவது தொடர்பில் எமது கட்சி எந்தவித நிபந்தனைகளையும் விதிக்கவில்லை. எமது கட்சியின் ஆதரவு தேவையா? இல்லையா? என்ற தீர்மானத்தை ஆளும் கூட்டமைப்பு அரசாங்கமே எடுக்கவேண்டும்.

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு அரசாங்கத்தின் அமைச்சுப் பொறுப்புக்களை ஏற்பது குறித்து இதுவரை எந்தத் தீர்மானத்தையும் நாம் எடுக்கவில்லை எனவும் ஆறுமுகம் தொண்டமான் தெரிவித்தார்.

இலங்கை தொழிலாளர் காங்கிரஸில் 8 பாராளுமன்ற உறுப்பினர்கள் உள்ளனர். இவர்களது ஆதரவு அரசுக்குக் கிடைக்கும் பட்சத்தில் பாராளுமன்றப் பெரும்பான்மையை அரசாங்கம் பெற்றுக்கொள்ளும் வாய்ப்புள்ளது. (த-121-08)

## சித்திரவதைக்கு...

ஓடி காட்டுப்பகுதியில் ஒளித்திருக்கும்போது விடுதலைப் புலிகளால் முகாமிற்கு அழைத்துச்செல்லப்பட்டனர். தொழிலுக்கு அழைத்து வந்த நபர் மொழிதெரியாத ஓரிடத்தில் தங்களை வேலைக்கு அமர்த்தியிருந்தார் என்றும் அங்கு பலத்த கடினமான வேலைகளுக்கு தாங்கள் பணிக்கப்பட்டதாகவும் கூறிய சிறுவர்கள், சந்தர்ப்பம் கிடைத்ததைப் பயன்படுத்தி தாங்கள் தப்பி வந்ததாகவும் விடுதலைப் புலிகளிடம் தெரிவித்தனர்.

இவ்விடயம் உடனடியாக அரசியல் பொறுப்பாளர் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டதைத் தொடர்ந்து அவர்கள் பெற்றோர்களிடம் ஒப்படைப்பதற்காக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். சிறுவர்களை கையளிக்கும்போது விடுதலைப் புலிகளின் திருமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் சி.எழிலன், சர்வதேச செஞ்சிலுவைச் சங்க பிரதிநிதிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ச)

## பட்டதாரிகளுக்கு...

மூன்று மாதங்களுக்கு வழங்கப்படும்.

பயிற்சிக் காலத்தின்போது நாளாந்த அடிப்படையில் பயிற்சிக் கொடுப்பனவு வழங்கப்படும். பயிலுநர் ஒருவர் தொடர்ந்து ஒரு வாரத்திற்குப் பயிற்சிக்குச் சமுகமளிக்காமலிருந்து அதற்குத் தகுந்த காரணம் காட்டாத சந்தர்ப்பத்தில் சம்பந்தப்பட்ட பயிலுநர் பயிற்சியிலிருந்து விலக்கப்படுவதற்குப் பணிக்கப்பட்டுள்ளதாகவும் அரச அதிபர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை நேற்று முன்தினம் வீரசிங்கம் மண்டபத்தில் வைத்து பட்டதாரிகளுக்கான பயிலுநர் நியமனக் கடிதம வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச)

## பொறித்தது ஜனாதிபதியின்...

ஏற்பட்டுள்ளது.

தலைமையக கட்டடத்திற்கான அடிக்கல்லை பிரதமர் மகிந்த ராஜபக்ஷ நாட்டினார். எனினும், அவர் அங்கு உரையாற்றவில்லை. ஜனாதிபதியின் நம்பிக்கைக்குரியவர்களான லக்ஷ்மன் கதிர்காமர், மங்கள சமரவீர, அனுரா பண்டாரநாயக்க ஆகியோரும் அங்கு சமுகமளித்திருக்கவில்லை. அனுரா பண்டாரநாயக்க வெளிநாடு ஒன்றிற்கு சென்றுவிட்டார்.

அக் கட்டடத்தின் திரைநீக்கம் செய்யும் ஞாபகார்த்தக் கல்லின் அடிக்கல்லை ஜனாதிபதி நாட்டியதாகவும், மைத்திரிபால சிறிசேனவினதும், மங்கள சமரவீரவினதும் முயற்சியினால் இது நடைபெற்றதாகவும் பொறிக்கப்பட்டுள்ளது. அங்கு கட்டப்பட்டிருந்த பதாகைகளிலும் ஜனாதிபதியின் பெயரே எழுதப்பட்டிருந்தது. ஆனால், ஜனாதிபதி தனிப்பட்ட விஜயம் மேற்கொண்டு லண்டன் பயணமாகியிருந்தார். ஜனாதிபதி நாடு திரும்பும்வரை இந்நிகழ்வினை பிற்போடுமாறும் கோரப்பட்டிருந்தது. ஆயினும் கடந்த புதன் காலை திட்டமிட்டபடி ஜனாதிபதி திரும்புவார் என்று விமான நிலையம் சென்ற அவரது பாதுகாப்புப் பிரிவினர் ஏமாற்றத்துடன் திரும்பினர். ஜனாதிபதியுடன் சென்ற 4 மெய்ப் பாதுகாவலர்களில் இருவர் மட்டும் நாடு திரும்பினர். மற்றைய இருவருடனும் ஜனாதிபதி பிரான்ஸ் பயணமானார்.

இதனால் ஏமாற்றமடைந்த கட்சித் தலைவர்களில் சிலர் ஜனாதிபதியின் கோரிக்கையைப் புறக்கணித்துவிட்டு, தலைமையகத்திற்கான அடிக்கல்லை நாட்டினர். இதனால் கட்சிக்குள் பெரும் பூகம்பம் வெடித்திருப்பதாக கூறப்படுகிறது. (ச,6)

## போர் எம்மீது...

மான பெ.சந்திரசேகரனுடன் நேற்று கிளிநொச்சியில் இடம்பெற்ற சந்திப்பின்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இச் சந்திப்புக் குறித்து கருத்துத் தெரிவித்த சந்திரசேகரன்,

தமிழ்ச்செல்வனுடனான இன்றைய சந்திப்பின்போது பல்வேறு விடயங்கள் குறித்து ஆராயப்பட்டது. இந்தியாவின் ஆளும் மற்றும் எதிர்க்கட்சித் தலைவர்களுடன் கலந்துரையாடல்களை மேற்கொண்டு வடக்கு - கிழக்கில் உள்ள தமிழ் மக்களின் தற்போதைய நிலை தொடர்பாக விளக்கமளிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழ் மக்கள் நிம்மதியாக இருக்கவேண்டும் என்பதில் விடுதலைப் புலிகள் அக்கறையாக உள்ளனர். அதேவேளை தமிழீழ விடுதலைப் புலிகள் சமாதான முயற்சிகளை முன்னெடுப்பதில் மிகத் தெளிவாக உள்ளனர். இலங்கையில் ஆளும் மற்றும் எதிர்க்கட்சிகளினாலேயே சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதில் பின்னடைவுகள் ஏற்பட்டுள்ளன என்றும் சந்திரசேகரன் தெரிவித்தார்.

இதேவேளை மல்வத்த மகாநாயக்கரையும், விடுதலைப் புலிகளையும் சந்திக்க வைக்கும் முயற்சியின் ஒரு கட்டமாகவே மலையக மக்கள் முன்னணியின் தலைவர் நேற்று கிளிநொச்சிக்கு பயணமானதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் அவர் ஏற்கனவே மல்வத்த மகாநாயக்கரை சந்தித்து உரையாடியிருந்தார். இச் சந்திப்பின்போது விடுதலைப் புலிகளுடனான சந்திப்புக்கு மகாநாயக்கர் தமது இணக்கத்தை வெளியிட்டிருந்தார்.

இதற்கிடையில் விடுதலைப் புலிகளையும் ஈ.பி.டி.பியினரையும் சந்திக்க வைக்க தாம் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் சந்திரசேகரன் தெரிவித்துள்ளார். (த-121)

## இடைக்கால...

சமாதான முயற்சியில் அரசாங்கம் அதிகளவான விட்டுக்கொடுப்புக்களை மேற்கொண்டுவிட்டது. வடக்குக்கிழக்கிற்கான இடைக்கால நிர்வாகம் ஒன்றை அமைப்பதற்கான பேச்சுக்கள் ஆரம்பிக்கப் படவேண்டும் என்பதில் அரசாங்கத்திற்குள் முரண்பாடான கருத்து இல்லை.

ஆனால், இடைக்கால நிர்வாகம் பற்றி பேச்சுக்களில் ஆராயப்பட்டு உடன்பாடு எட்டப்பட்ட பின்னர் அதனை நடைமுறைப்படுத்துவதற்காக மூன்று மாத காலப்பகுதிக்குள் இறுதித்தீர்வு குறித்து பேச்சுக்களை ஆரம்பிக்கமுடியும்.

அரசின் இந்த நிலைப்பாட்டை விடுதலைப் புலிகளுக்கு தெரியப்படுத்திவிட்டோம். ஆனால், அரசின் இந்த நிலைப்பாட்டிற்கு விடுதலைப் புலிகள் உடன்பட்டபாடாக இல்லை.

இதனாலேயே சமாதான முயற்சிகளில் ஒருவிதமான தேக்கநிலை ஏற்பட்டுள்ளது. எனவே இந்த தேக்க நிலைமையக் களையும் பொருட்டு நோர்வே அனுசரணையாளர்களை நாம் அழைத்துள்ளோம்.

நோர்வேயின் விசேட தூதுவர் எரிக் சோல்ஹெய்ம் எதிர்வரும் 13 ஆம் திகதி இலங்கைக்கு வரவுள்ளார்.

இதன்மூலம் விடுதலைப் புலிகளை ஒரு உடன்பாட்டுக்குக் கொண்டுவர முயற்சி எடுத்துள்ளோம்.

அரசின் நிலைப்பாட்டை விடுதலைப் புலிகள் ஏற்கும்பட்சத்தில் சமாதான முயற்சிகளில் தடங்கல் எதுவும் ஏற்படாது என்றும் ஜனாதிபதி அங்கு தெரிவித்தார். (ச)

## புலிகளின்...

மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் கௌசல்யன், அம்பாறை மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் ஜனார்த்தனன், மட்டக்களப்பு நகர அரசியல்துறைப் பொறுப்பாளர் ராம் ஆகியோர சென்றுள்ளனர்.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு வவுணதீவுப் பிரதேச செயலகத்தில் படையதிகாரிகளுடன் இடம்பெறவுள்ள சந்திப்புக் குறித்து ஆராய்வதே இவர்களது பயணத்தின் நோக்கமாக இருக்கலாம் என்று கருதப்படுகின்றது. (த-121)

## தலைவர்...

மேன்முறையீட்டு நீதிமன்றம் இந்த உத்தரவை பிறப்பித்துள்ளது.

தற்போது நடைமுறையிலுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தின் பிரகாரம் எந்த உத்தரவும் பிறப்பிக்க முடியாதெனவும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் உத்தரவே செயல்திறன் வாய்ந்ததெனவும் மேன்முறையீட்டு நீதிமன்றம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, ரணில் விக்கிரமசிங்க தற்போது ஆட்சியில் இல்லாததால் இன்றைய அரசாங்கத்தை ஆஜராகுமாறு நீதிபதி அழைப்பாணை விடுத்தார். இதற்கிடையில் குறுக்கிட்ட அரச சட்டத்தரணி புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கைச்சாத்திட்டது ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அன்றைய அரசாங்கமே என வாதாடினார்.

இதனடிப்படையில் இந்த வழக்கின் பிரதிவாதிகளாக ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ மற்றும் ஆளும் சுதந்திரக் கூட்டமைப்பு அமைச்சரவையும் நீதிமன்றத்தில் ஆஜராகுமாறு அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது. (121-08)




இப்பத்திரிகை வலம்புரி அன். கோ ஸ்தாபனத்தாரால் இல.15 வெள்ளாந்தெரு, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 04.09.2004 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.